பக்கங்கள்: 12 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 புரட்டாதி 31 புதன்கிழமை 17.10.2018 கதிர் 345

**இனி இது ரகசியம் அல்ல!**

டிசெம்பர் 10 ஆம் திகதி – சர்வதேச மனித உரிமைகள் தினம். முதலமைச்சர் விக்னேஸ்வரன் மற்றும் வடக்கு மாகாணத்தின் இரண்டு அமைச்சர்களுக்கு உள்ள உரிமைகள் தொடர்பான விடயமும் வழக்குத் தீர்ப்பாக அன்றுதான் வரப் போகின்றது. அவர்களுக்கு பக்கம் 02

# டிசெ. 31 க்கு முன் காணிகளை விடுவிக்க ராணுவம் இணக்கம்

## ஆயினும் அதற்குப் பணம் வேண்டுமாம் அரசிடம் பேசக் கூட்டமைப்புத் தீர்மானம்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 17

படைகள் வசமுள்ள மக்களின் காணிகளை டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் விடுவிக்கவேண்டுமென ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளார். அதற்கமைய யாழ். மாவட்டத்தில் முப்படை மற்றும் பொலிஸார் வசமுள்ள காணிகளை விடுவிப்பதற்கு நேற்று இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

ஆயினும் காணிகளை விடுவிப்பதற்குப் பணம் தேவையென்று படைகள் கோரியுள்ளமையால் அதனை வழங்கவேண்டுமென்று நாம் அரசைக் கோரவுள்ளோம்.

– இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன். பக்கம் 11

## வடக்கு இளைஞர்கள் மூவர் கட்டுநாயக்காவில் கைது!

கொழும்பு, ஒக். 17

வட ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான அல்ஜீரியாவுக்குப் போலிக் கடவுச்சீட்டின் ஊடாக செல்வதற்கு முயற்சித்த குற்றச்சாட்டில் மூன்று தமிழர்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான பக்கம் 11

## சுருதி மாற்றிவிட்டார் சம்பந்தன்!

### சுரேஷ் பிறேமச்சந்திரன் சீற்றம்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 17

தமிழ் மக்களின் உரிமைக்காக நடத்தப்பட்ட ஆயுதப் போராட்டத்தை கொச்சைப்படுத்துவதற்கு இரா.சம்பந்தனுக்கு எந்தவித உரிமையும் இல்லை. விடுதலைப் புலிகளை ஏகப்பிரதிநிதிகளாக ஏற்று அவர்களை ஆதரித்துப் பேசிய சம்பந்தனின் சுருதி பக்கம் 11

## தமிழ்க் கைதிகள் விடயத்தில் அரசியல் தீர்மானமே தேவை

### சுரேஷ் பிறேமச்சந்திரன் வலியுறுத்தல்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 17

தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தைச் சட்டப் பிரச்சினையாகப் பார்க்காது அரசியல் பிரச்சினையாகப் பார்க்கவேண்டும்.

– இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலை பக்கம் 11

## வடக்கு முதல்வர் விக்கி ஒக்.24 முக்கிய அறிவிப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 17

தமிழ் மக்களின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பிலான மாபெரும் மக்கள் ஒன்றுகூடல் எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தனது எதிர்கால நிலைப்பாடு தொடர்பில் தமிழ் பக்கம் 11

## அரசியல் கைதிகள் விடயத்தில் இன்று தீர்வு தருவார் மைத்திரி

### கூட்டமைப்பின் தலைவர் நம்பிக்கை

கொழும்பு, ஒக். 17

தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரம் தொடர்பாக இன்று புதன்கிழமை நடத்தப்படவுள்ள பேச்சுக்களின் போது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒரு தீர்வை வழங்குவார் என்று தாம் நம்புகின்றார் எனஎனுதமிழ்த் தேசியக் பக்கம் 11

## விக்கி மீதான நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் பூர்வாங்க ஆட்சேபனை மீது டிசெ.10 தீர்ப்பு

கொழும்பு,ஒக்.27

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனுக்கும் மற்றும் இரண்டு அமைச்சர்களுக்கும் எதிராக டெனிஸ்வரன் தொடர்ந்துள்ள நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடர்பில் முதலமைச்சர் பக்கம் 11

## பரபரப்பை ஏற்படுத்திய யுவதி கடத்தல் சம்பவம்!

### யாழ்ப்பாணத்தில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ்ப்பாணம் – செம்மணிப் பகுதியில் யுவதி ஒருவர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் பக்கம் 11

## ஆட்சிமாற்றத்தில் மக்கள் ஆர்வம் காட்டவேயில்லை

### கூறுகிறார் அமைச்சர் நளின் பண்டார

கொழும்பு, ஒக். 17

பொதுமக்கள் தற்போது ஆட்சி மாற்றத்தில் ஆர்வம் காட்டவில்லை. மோசடிகள் மற்றும் ஊழல்களில் ஈடுபட்டவர்களே பக்கம் 11

## பிரதேச சபை உறுப்பினர் உட்பட ஆறு பேருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஒக். 17

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வலிகாமம் தெற்கு பிரதேச சபை உறுப்பினர் சிவரூபன் லகிந்தன் உட்பட ஆறு பேரை எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்ற நீதிபதி அலெக்ஸ்ராஜா உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரதேச சபை உறுப்பினர் உள்ளிட்ட குழுவினர் தாக்கியமையால் சகோதரர்கள் பக்கம் 02

## கிணற்றுக்குள் குண்டுகள்!

முல்லைத்தீவு, ஒக். 17

முல்லைத்தீவு – புதுக்குடியிருப்புப் பிரதேச சபை வளாகக் கிணறு ஒன்றில் இருந்து அபாயகரமான வெடிகுண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பிரதேச சபை ஊழியர்கள் சுமார் 50 அடி ஆழம் கொண்ட இந்தக் கிணற்றைச் சுத்தம் செய்யும் பணியில் நேற்று ஈடுபட்டிருந்தனர். பக்கம் 11

## வரவு–செலவுத் திட்டத்தை கூட்டமைப்பு ஆதரிக்கும்

### மனோ கணேசன் நம்பிக்கை

கொழும்பு, ஒக். 17

2019 ஆம் ஆண்டுக்கான வரவு –செலவுத் திட்டத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்கும் என்று தான் நம்புகிறார் எனத் தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்தபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் அரசியல் கைதிகள் தொடர்பிலான விசாரணைகள் உரிய முறையில் நடத்தப்பட வேண்டும் பக்கம் 11

காலைக்கதிர் Kalaikkathir



# பிரதேச சபை ஊடாக மக்களின் தேவைகளை கண்டறிந்து முழு அளவில் நிறைவு செய்வோம்

## ஊர்காவற்றுறைக் கூட்டத்தில் கட்சியினருக்கு டக்ளஸ் அறிவுறுத்தல்

ஊர்காவற்றுறை, ஒக்.17

மக்கள் எம்மை நம்பியதன் அடிப்படையிலேயே இந்தபிரதேச சபையை மீண்டும் எமது கைகளில் ஒப்படைத்துள்ளார்கள். அந்த வகையில் இந்த மக்களின் எதிர்பார்ப்புக்களை ஈடு செய்யும் வகையில் இந்தப் பிரதேச சபையை நாம் நிர்வகிக்கும் காலத்தில் முடியுமான மக்கள் நலன்சார்ந்த செயற்திட்டங்களை முன்னெடுக்க தயாராக இருக்கின்றோம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஊர்காவற்றுறையில் நேற்று இடம்பெற்ற கட்சியின் ஆலோசனை சபைக் கூட்டத்திலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். மேலும் அவர் அங்கு தெரிவிக்கையில்–

கடந்த காலங்களில் தீவகத்தின் வேலணை, நெடுந்தீவு மற்றும் ஊர்காவற்றுறை பகுதிகளில் உள்ளூராட்சிசபைகளைக் கைப்பற்றிக்கொண்டு பல்வேறுபட்ட மக்கள் நலன்சார்ந்த செயற்திட்டங்களை நாம் முன்னெடுத்திருந்தோம். அந்த அடிப்படையிலேயே நெடுந்தீவில் 24 மணி நேர மின்சாரத்தை வழங்கியிருந்தமை மட்டுமன்றி உவர் நீரை நன்னீராக்கி மக்களுக்குக் குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டையும் தீர்த்து வைத்திருக்கின்றோம்.

இதேபோன்றுதான்வேலணை மற்றும் ஊர்காவற்றுறை பிரதேச சபைகளுக்கு ஊடாகவும் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம். தீவகத்தில் நீண்டகாலமாக இருக்கக்கூடியதான குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு எதிர்காலத்தில், சரியான முறையில் தீர்வு காண வேண்டியது அவசியமானது.

அந்த அடிப்படையில் இங்குள்ள குளங்களை ஆழமாக்கி புனரமைக்கும் பணிகளை கடந்த கலங்களில் முன்னெடுத்திருந்தோம். அதுபோன்று இனி வரும் காலங்களிலும் சிரமதானப் பணிகள் ஊடாகவும் ஏனைய வேலைத்திட்டங்களுக்கு ஊடாகவும் குளங்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் ஆலோசனையாக வழங்கியிருந்தேன். அதனடிப்படையிலேயே இங்குள்ள குளங்கள் சில சிரமதானப் பணிகளுக்கு ஊடாகச் செப்பனிடப்பட்டுள்ளமையையும் நினைவுபடுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

இனிவரும் காலம் மழைகாலமாக இருக்கும் நிலையில், நிலத்தடி நீரை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் மக்களுக்கு பிரதேச சபை மூலம் தெளிவுபடுத்த வேண்டும். குறிப்பாக இங்குள்ள கால்நடைகளுக்குக் கோடை காலங்களில் குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டை





நிவர்த்தி செய்யும் வகையில் தொட்டிகள் அமைக்கப்பட்டு அவற்றில் மழை நீரை சேகரிப்பதன் வாயிலாகக் கோடைகாலங்களில், கால்நடைகளுக்கு போதுமான நீரை வழங்க முடியும் என்ற அடிப்படையிலேயே தொட்டிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான தொட்டிகள் எதிர்காலத்தில் பாரியளவில் ஆங்காங்கு அமைக்கப்படும்.

மாரி காலங்களில் எமது மக்களுக்கு ஏற்படக்கூடிய தொற்று நோய்கள் உள்ளிட்ட நோய்த் தாக்கங்களில் இருந்தும் மக்களை பாதுகாக்கும் நடவடிக்கைகளிலும் பிரதேச சபை அர்ப்பணிப்புடனும் அக்கறையுடனும் உழைக்க வேண்டும்.

இதேவேளை வீதி விளக்குகள், பாதை புனரமைப்பு, குடிதண்ணீர் விநியோகம் உள்ளிட்ட மக்களுக்கான தேவைகளை இனங்கண்டு அவற்றைச் சரியான முறையில், முன்னெடுப்பதற்கு பிரதேச சபை எப்போதும் முன்னுதாரணமாகத்திகழ வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும். அதுமாத்திரமன்று. அதிக மழை வீழ்ச்சி இடம்பெறும் பட்சத்தில் ஏற்படக்கூடிய அனர்த்த காலங்களின் போதும் மக்களின் தேவைகளை அறிந்துகொண்டு அவற்றுக்கான தீர்வுகளை காண்பதிலும் பிரதேச சபை மக்களின் எதிர்பார்ப்பிற்கு ஏற்ப செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயம்.– என்றும் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்வில் கட்சியின் ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தவிசாளரும் கட்சியின் அந்தப் பிரதேச நிர்வாக செயலாளருமான ஜெயகாந்தன், கட்சியின் யாழ் மாவட்ட நிர்வாக செயலாளர் கா.வேலும்மயிலும் குகேந்திரன் உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் உடனிருந்தனர்.

## பிரதேச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருவர் காயமடைந்து தெல்லிப்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

காயமடைந்தவர்கள் பிரதேச சபை உறுப்பினர் உள்ளிட்டவர்களுக்கு எதிராக முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்த சுன்னாகம் பொலிஸார், வலி தெற்குப் பிரதேச சபை உறுப்பினர் உள்ளிட்ட நான்கு பேரையும் காயமடைந்தவர்கள் தரப்பில் இரண்டு பேரையும் நேற்றுக் காலை கைது செய்திருந்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்ட சுன்னாகம் பொலிஸார் மாலை 5.00 மணியளவில் மல்லாகம் நீதிமன்ற நீதிபதி ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா முன்னிலையில் அவர்களை முற்படுத்தினர்.

இதன்போது வலி தெற்குப் பிரதேச சபை உறுப்பினர் உள்ளிட்ட நான்கு பேர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம் தலைமையில் சட்டத்தரணிகளாக சுகாஸ், மணிவண்ணன், சுபாஸ், றோய் ஆகியோரும், தாக்குதலுக்கு உள்ளானவர்கள் சார்பில் சட்டத்தரணி சர்மினி விக்னேஸ்வரனும் ஆஜராகியிருந்தனர்.

பிரதேச சபை உறுப்பினர் தலைப் பகுதியில் இரும்புக் குழாயினால் தாக்கியுள்ளமையால் கொலை முயற்சி தண்டனைச் சட்டக்கோவை பிரிவு 300 கீழ் இவ்வழக்கு விசாரிக்கப்படவேண்டும் என சட்டத்தரணி சர்மினி விக்கினேஸ்வரன் மன்றில் விண்ணப்பம் செய்தார்.

இதுதொடர்பாக ஆராயப்படும் என சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

இரு தரப்புச் சட்டத்தரணிகளின் விவாதங்களையும் கேட்ட நீதிபதி, பிரதேச சபை உறுப்பினர் உள்ளிட்ட ஆறு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 29 திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(ஐ-07)

# ஹற்றனில் மீண்டும் மண் சரிவு அபாயம்

கொழும்பு, ஒக். 17

நோர்வூட் நிவ்வெளிகம பகுதியில் மீண்டும் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆய்வு திணைக்களத்தின் பணிப்பாளர் சமந்த போகாபிட்டிய தெரிவித்தார்.

நேற்றுச் செவ்வாய்க்கிழமை தேசிய கட்டட ஆய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் வரவழைக்கப்பட்டு அந்தப் பகுதியில் மீண்டும் பரிசோதனை மேற்கொண்டபோதே இதனை அவர் குறிப்பிட்டார்.

மண்சரிவு ஏற்பட்டுள்ள பகுதியில் ஹற்றன் – மஸ்கெலியா பிரதான வீதியில் அருகாமையில் பாரிய மண்மேடு ஒன்று சரிந்து விழும் அபாயத்திலும் மேலும் இரண்டு குடியிருப்புகள் சரிந்து விழும் அபாயத்திலும் காணப்படுகின்றன என அவர் மேலும் கூறினார்.

# ஜனாதிபதியின் செயற்பாடுகள் நம்பிக்கையற்றனவாகவே உள்ளன

## சமூக நீதிக்கான தேசிய இயக்கம் கூறுகிறது

கொழும்பு, ஒக். 17

ஜனாதிபதியின் செயற்பாடுகள் நம்பிக்கையற்றனவாகவே உள்ளன என சமூக நீதிக்கான தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கருத்து வெளியிடும் போதே அந்த இயக்கத்தின் ஏற்பாட்டாளர் பேராசிரியர் சரத் விஜேசூரிய இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

நாட்டின் அரசியல் ஸ்திரமற்று இருக்கும் நிலையில் ஜனாதிபதியின் செயற்பாடுகள் நம்பிக்கையற்றனவாக இருக்கின்றன.

அரசியல் தலைவர்கள் அரசு அமைப்பது தொடர்பாக இரகசியச் சந்திப்புக்களை நடத்தி காலத்தைக் கழிப்பதால் நாட்டின் பொருளாதார பிரச்சினைக்கோ மக்களின் பிரச்சினைக்கோ தீர்வு கிட்டப்போவதில்லை.

இந்த நடவடிக்கைகள் அனைத்தும் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் போராட்டமாகவே இருக்கின்றன.

அதனால் பொதுத் தேர்தலொன்றுக்குச் சென்று மக்கள் ஆணை கிடைக்கும் கட்சி உறுதியான அரசு ஒன்றை அமைத்து நாட்டின் பொருளாதார நிலையை உறுதிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இல்லாவிட்டால் நாடு பாரிய பொருளாதார பிரச்சினைக்கு முகம்கொடுக்கவேண்டிய நிலை ஏற்படும் – என்றார். (ஐ)

## இனி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிராக டெனிஸ்வரன் தாக்கல் செய்துள்ள நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடர்பான முக்கிய தீர்ப்பு அப்படி சர்வதேச மனித உரிமைகள் தினத்தில்தான் வெளியாகப் போகின்றது.

அவர்களைப் பொறுத்தவரை இந்த வழக்கு காலைச் சுற்றிய பாம்பு என்பதை நேரத்துடனேயே இப்பத்தியில் கோடி காட்டி விட்டேன்.

இந்த வழக்கில் பிரதிவாதிகளில் ஒருவர் முன்னாள் சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம். இவ்வழக்கில் அவரது சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன். நேற்றைய வழக்கு விச்சரணைக்கு சுமந்திரன் போகவில்லை. யாழ்ப்பாணத்தில் முக்கிய கூட்டம் ஒன்றில் பங்குபற்றுவதற்காக யாழில் தங்கியிருந்தார்.

*"வழக்குக்குப் போகவில்லையா? இந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கை மேன்முறையீட்டு நீதிமன்றம் விசாரிக்கவே முடியாது எனப் பூர்வாங்க ஆட்சேபனை கிளப்பப்பட்டுள்ளதே. அது தொடர்பில் உங்கள் வாதம் அவசியமற்றதா?"* – என்று அவரிடம் நேற்றுக் கேட்டும் வைத்தேன்.

அவர் வெகு ஸிம்பிளாகப் பதில் தந்தார்.

*"இந்த வழக்கில் எதிர்த் தரப்புக்கு நிலைமை விளங்கி விட்டது. காலத்தை இழுத்தடிக்கவே இந்தப் பூர்வங்க ஆட்சேபனைப் பூச்சாண்டி. உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் அவமதிப்பு வழக்குக்கான ஒழுங்கு விதிகள் யாக்கப்படவில்லை என்பது உண்மைதான். ஆனால், அதற்காக நீதிமன்ற அவமதிப்பு வழக்குகளை அந்த நீதிமன்றங்கள் விசாரிக்கவே கூடாது என்ற வாதத்தை நீதிமன்றம் ஒரு போதும் ஏற்கப் போவதில்லை.*

*"அத்தகைய விடயத்தில் நீதிமன்றம் சரியானதைச் செய்யும். அதைச் சொல்வதற்கு நான் போக வேண்டிய தேவையேயில்லை. இப்போது இந்தப் பூர்வாங்க ஆட்சேபனையை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டால், நாற்பது வருடங்களுக்கு மேலாக இந்த நீதிமன்றங்கள் விசாரித்து வந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்குகள் எல்லாம் தவறு என்றாகி விடும். அது மாத்திரமல்ல, இனி மேலும் நீதிமன்ற அவமதிப்பு வழக்குகளை இந்த நீதிமன்றங்கள் விசாரிக்க முடியாமலேயே போய்விடும். அத்தகைய நிலைமை வந்தால் யாருமே நீதிமன்றத் தீர்ப்பை மதிக்காமல் செயற்படும் நிலைமையே ஏற்பட்டு விடும். ஆகவே இந்த ஆட்சேபனைகள் எல்லாம் நின்று பிடிக்கா"* – என்று மிக மிக உறுதியாகச் சொன்னார் சுமந்திரன்.

இதைப் பார்த்தால், இந்த வழக்கு முதல்வர் விக்கிதரப்புக்கு காலைச் சுற்றிய பாம்புதான்.

நான் முன்னர் ஏற்கனவே இப்பத்தியில் குறிப்பிட்டபடி மாகாண சபையின் பதவிக்காலம் முடிந்தாலும் இந்த வழக்குகள் தொடரத்தான் போகின்றன என்பதும் தெளிவாகி வருகிறது.

பாவம் முதல்வரும் இரண்டு அமைச்சர்களும். மாகாண சபையின் பதவிக்காலம் இன்னும் ஒரு கிழமையில் அவுட். அதற்குப் பின்னர் சபையின் வாகன வசதியோ பிற உதவிகளோ அவர்களுக்குக் கிடைக்க மட்டா. சொந்தச் செல்வில்தான் வழக்குத் தவணைகளுக்கு கொழும்புக்குப் போய்வர வேண்டியிருக்கும்.

பலரும் கூறுகின்றமை போல இந்தப் பூர்வாங்க ஆட்சேபனையை நீதிமன்றம் நிராகரித்தால் முதல்வர் தரப்புக்கு பல சிக்கல்கள் இருக்கும் என்பது எதிர்பார்க்கப்படுவதே.

– மின்னல் –

# மோடி – ரணில் இவ்வாரம் டில்லியில் முக்கிய பேச்சு

## இந்தியாவின் உதவித் திட்டங்கள் குறித்து

கொழும்பு, ஒக்ரோபர் 17

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த வார பிற்பகுதியில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் முக்கியத்துவம் வாய்ந்த இருதரப்புப் பேச்சுக்களை நடத்தவுள்ளதாக 'ஹிந்து' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும், 19ஆம் , 20ஆம் திகதிகளில் புதுடில்லிக்குப் பயணம் மேற்கொள்ளவிருக்கிறார். இதன்போது அவர், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்டவர்களுடன் உயர்மட்டச் சந்திப்புகளை நடத்தவுள்ளார்.

இந்தப் பயணம் இரண்டு தரப்புகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் இந்தியாவின் உதவியுடனான திட்டங்களை முன்னெடுப்பதில் காணப்படும் தாமதம் குறித்து, புதுடில்லி கவலை கொண்டுள்ளது.

இந்தியாவையும், சீனாவையும் சமநிலைப்படுத்தும் விடயத்தில், கொழும்பு சிக்கல்களைச் சந்தித்து வருகிறது.

இந்தியத் தரப்பில், மத்தள விமானநிலையம், பலாலிவிமான நிலையம், திருகோணமலை எண்ணெய்த்தாங்கிகள், கொழும்பு துறைமுகக் கிழக்குக் கொள்கலன் முனையம், கரவலப்பிட்டிய எரிவாயு மின் நிலையம் உள்ளிட்டவை முன்னுரிமைக்குரிய திட்டங்களாக உள்ளன.

எனினும், இருதரப்பு கலந்துரையாடல்கள், மற்றும் அபிவிருத்தி ஒத்துழைப்பு, மற்றும் வணிக ஒத்துழைப்பு போன்ற கூட்டு உடன்பாடுகள் செய்து கொள்ளப்பட்டபோதும், இந்தத் திட்டங்கள்முன்னெடுக்கப்படவில்லை.

சிலவற்றில் அரசியல் காரணங்களாலும், ஏனைய அதிகாரப் பிரச்சினைகளாலும், இந்த திட்டங்களில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக, தமது பெயரை வெளியிட விரும்பாத கொழும்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

மத்தள விமான நிலையம், திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகள் போன்ற சில திட்டங்களில் இந்தியாவின் மூலோபாய நலன்கள் உள்ளன.

எனினும் மத்தள விமான நிலையம் தொடர்பாகக் கடந்த சில மாதங்களாக, புதுடில்லியும் கொழும்பும் முரண்பட்ட தகவல்களை வெளியிட்டு வருகின்றன.

இந்த நிலையில் புதுடில்லியில் நடக்கப்போகும் கலந்துரையாடல்கள், இந்தத் திட்டங்களை விரைவுபடுத்த உதவும் என்று நம்புவதாக இருதரப்பு அதிகாரிகளும் தெரிவித்துள்ளனர்.

இலங்கை முன்னாள் அதிபர் மஹிந்த ராஜபக்ஷ கடந்த மாதம் புதுடில்லியில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துப் பேசி, ஒரு மாதத்துக்குப் பின்னர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியப் பிரதமரைச் சந்திக்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சீன வணிக அமைச்சரை சந்தித்து பேசுவார் மலிக்



கொழும்பு, ஒக். 17

சீனாவுடன் சுதந்திர வணிக உடன்பாடு செய்து கொள்வது தொடர்பான பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதில் இலங்கை அரசு கவனம் செலுத்தியுள்ளது.

இது தொடர்பாக தாம் அடுத்த மாதம், சீனாவின் வணிக அமைச்சரைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார் என இலங்கை அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் அனைத்துலக வணிக அமைச்சர் மலிக் சமரவிக்ரம தெரிவித்துள்ளார்.

சீனாவின் ஷங்காய் நகரில் அடுத்த மாதம், அனைத்துலக மாநாடு ஒன்று நடைபெறவுள்ளதாகவும், அதில் பங்கேற்கச்செல்லும்போது, சீனாவின் வணிக அமைச்சரைச் சந்திக்கவுள்ளார் எனவும் மலிக் சமரவிக்ரம கூறியுள்ளார்.

சுதந்திர வணிக உடன்பாடு தொடர்பாக இலங்கை இப்போது, இந்தியா, தாய்லாந்து, பங்களாதேஷ் ஆகிய நாடுகளுடன் பேச்சுக்களை நடத்தி வருகிறது. பங்களாதேசுடனான சுதந்திரவணிகஉடன்பாடுகுறித்த கூட்டு சாத்திய ஆய்வு நிறைவு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

# மஹிந்தவை பிரதமராக்குவதால் நெருக்கடி நிலை தீர்ந்துவிடாது

## கூறுகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஒக். 17

மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக கொண்ட இடைக்கால அரசை அமைப்பதால் மட்டும், தற்போதைய நெருக்கடிகளைத் தீர்த்து விட முடியாது என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

மருதானையில் நேற்று முன் தினம் நடத்திய ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட ஜே.வி.பியின் தொழிற்சங்கப் பிரிவின் தலைவர் கே.டி.லால்காந்த, தற்போதைய நிலையில், நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, புதிய அரசைத் தெரிவு செய்யும் வாய்ப்பு மக்களுக்கு அளிக்கப்பட வேண்டும்.

மக்கள் பெரும் துன்பங்களைச் சந்தித்து வருகின்றனர். இது நல்லாட்சி அரசு அல்ல. அடக்குமுறை அரசு. இந்த அரசு அமெரிக்க டொலரில் அதிகமாகத் தங்கியிருப்பதால்தான், பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது.

மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக இருக்கவிட்டு, மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக்குவதால் இந்த நெருக்கடியைத் தீர்க்க முடியாது.

இவர்கள் காலத்துக்குக் காலம், மாறி மாறி அதிகாரத்துக்கு வருகிறார்கள். அந்தப் பாவங்களுக்குத்தான் இப்போது விலை செலுத்துகிறோம்.

முன்னர் நாங்கள் ஒரு சர்வாதிகாரியை வைத்திருந்தோம். இப்போது ஒரு பொம்மையை வைத்திருக்கிறோம். – என்றார். (ஐ)

# இடைக்கால அரசு அமைக்கும் எண்ணம் எம்மிடம் கிடையாது

## மஹிந்த அமரவீர திட்டவட்டம்



கொழும்பு, ஒக். 17

இடைக்கால மேற்பார்வை அரசை அமைப்பது தொடர்பாக அண்மைக் காலமாக வெளியாகும் செய்திகள் அனைத்துமே, திரிபுபடுத்தப்பட்டவை என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலரும், அமைச்சருமான மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

மொனராகலையில் நேற்று முன் தினம் அன்னாசி உற்பத்தி அபிவிருத்தி திட்ட ஆரம்ப நிகழ்வில் உரையாற்றிய அவர் –

இடைக்கால அரசை அமைக்கின்ற எந்த முயற்சியும் முன்னெடுக்கப்படவில்லை. அவ்வாறான ஒன்றை அமைக்கும் எண்ணம் எமக்குக் கிடையாது.

2020 ஆம் ஆண்டு வரை இந்தக் கூட்டு அரசு பதவியில் இருக்கும். அதற்கு முன்னர் அரசில் மாற்றம் ஏற்படாது.

எந்தவொரு புதிய அரசும் மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட வேண்டுமே தவிர, சூழ்ச்சிகளின் மூலம் அல்ல. என்றார். (ஐ)

# வவுனியா பள்ளிவாசலில் ராணுவம் விசேட வழிபாடு



வவுனியா, ஒக். 17

வவுனியா நகரப் பள்ளிவாசலில் நேற்று இலங்கை இராணுவத்தினரின் 69ஆவது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டுவிடேசமய வழிபாடு இடம்பெற்றது.

வவுனியா நகர ஜும்மா பள்ளியின் பிரதான மௌலவி அல் ஹபீர் அமிரின் ஆலோசனைக்கு அமைவாக நிர்வாக சபை மற்றும் பிரதேச முஸ்லிம் மக்களின் ஒத்துழைப்புடனும் வன்னி மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் குமுது பெரேரா தலைமையில் ஜும்மா பள்ளியில் விசேட வழிபாடு இடம்பெற்றது.

இவ் விசேட பிரார்த்தனையின்போது 59ஆவது இராணுவப் படை யணியும் 5 பிரிவுகளைச் சேர்ந்த இராணுவத்தினரும் கலந்து கொண்டனர். (ஐ-100)

# குடும்பப் பெண் கொலை; மூவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஒக். 17

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊரெழு பகுதியில் குடும்பப் பெண்ணை அடித்துக்கொலை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மூன்று பேரை எதிர்வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊரெழு மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணியளவில் குடும்பப் பெண் ஒருவர் கொடூரமாக அடித்துக் கொலை செய்யப்பட்டார்.

வீட்டுக்குள் புகுந்த 6 பேர் கொண்ட கும்பல் ஒன்று மகனைத்தாக்க முற்பட்டபோது, அதனைத் தடுக்க முற்பட்ட தாயார் பொல்லு மற்றும் கம்பியால் தலையில் தாக்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

சம்பவத்தில் சந்திரராசா விஜயகுமாரி (வயது – 58) என்ற குடும்பப் பெண்ணே கொலை செய்யப்பட்டார். அவரது மகன் காயமடைந்தார்.

இந்த நிலையில் அந்தக் கொலையுடன் தொடர்புடைய மூவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அதிகாலை கோப்பாய் பொலிஸில் சரணடைந்தனர். எனினும் அவர்கள் மூவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபர்கள் மூவரும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் வியாழக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் உத்தரவிட்டார்.

இதேவேளை, சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய மூவர் தொடர்பான தகவலைப் பொலிஸார் நீதிமன்றில் தெரிவிக்கவில்லை. அத்துடன், பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட முதல் அறிக்கையிலும் மூன்று சந்தேகநபர்கள் தொடர்பிலேயே தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

காலைக்கதிர் Kalaikkathir



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## என்ன செய்யப் போகின்றது கூட்டமைப்பு?

தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தை ஒட்டி தமிழ்த் தரப்பு அரசியல் கட்சிகளின் அரசியல் நிலைப்பாடுகளை அலசும் சூழல் வந்திருக்கிறது.

இவ்விடயத்தை ஒட்டி ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. ஒரு கருத்தை முன்வைத்திருக்கிறார்.

சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை உள்ளிட்ட தமிழ் மக்களின் பிரச்சினைகள் அனைத்தையும் நல்லாட்சி அரசு வந்த கையோடே, அதனுடன் பேசித் தீர்த்திருக்க வேண்டும். புதிய அரசு பதவியேற்று ஆறு மாதங்கள் முதல் ஒரு வருடத்துக்குள் இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்திருக்க வேண்டும். இப்போது காலம் கடந்து, தீர்வுக்குரிய வாய்ப்பான காலம் காலாவதியாகி கனகாலமுமாகிவிட்டது என்று டக்ளஸ் குறிப்பிடுகின்றார்.

அதை ஏற்கனவே இப்பத்தியில் நாமும் பல தடவைகள் திரும்பத் திரும்பக் குறிப்பிட்டுச் சுட்டிக் காட்டியுமிருக்கிறோம்.

இந்த ஜனாதிபதியின் ஐந்து ஆண்டு பதவிக் காலத்தில் நான்கு ஆண்டுகள் முடியும் கட்டத்தில் நாம் இருக்கிறோம். தற்போதைய நல்லாட்சி அரசின் பதவிக் காலமும் மூன்றரை ஆண்டுகள் கடந்து விட்டன. இதற்குப் பின்னரும் கூட, 'தீர்வை எட்டுவதாயின் இந்த அரசைப் பகைக்கமுடியாது' என்ற கதையை கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கூறிக் கொண்டிருக்கலாமா? - என்ற கேள்வியைத்தான் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. இப்படிப் போடுகின்றார் என்று நினைக்கின்றோம்.

தமிழரின் தரப்பில் அவர்களின் பல்வேறு பிரச்சினைகளுக்குப் பேசித் தீர்வு காண்பதற்கு இன்னும் வாய்ப்புகள் இருக்கின்றன என்றும் சம்பந்தனும் சுமந்திரனும் கூறிக் கொண்டு, நல்லாட்சி அரசுக்கு முண்டு கொடுத்துக் கொண்டிருக்கலாம். ஆனால், விவகாரம் 'ஆறின கஞ்சி பழங் கஞ்சி' என்றாகி விட்ட நிலையில், தமிழ் மக்கள் இன்னும் - இதற்கு மேலும் - பொறுத்துக் கொள்வார்களா என்பதே கேள்வி.

தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் தொடர்பில் சம்பந்தன், சுமந்திரன் உட்பட்ட கூட்டமைப்புக் குழுவினர் இன்று மாலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்திக்கின்றனர். இவ்விடயத்தில் திட்டவட்டமான - தீர்க்கமான - ஓர் அரசியல் தீர்மானத்தை நாட்டின் தலைவர் எடுப்பாரா, எடுக்கக் கூடிய திராணி அவருக்கு உண்டா என்பது தொடர்பில் ஒரு முடிவை கூட்டமைப்புத் தலைமை இன்று கண்டறிந்து வெளிப்படுத்த வேண்டும்.

இதற்குப் பின்னரும், துரித விசாரணை, விரைவில் நீதிமன்றம் மூலம் தீர்வு என்ற இழுத்தடிப்புகள் அரசுத் தரப்பினால் - ஜனாதிபதி பக்கத்தினால் - முன்வைக்கப்படுமானால், அதன் பின்பும் அதை நம்பிக் கொண்டிராமல், இந்தக் கைதிகள் விடயத்தில் திட்டவட்டமான முடிவை எட்டுவதற்கான ஆக்கபூர்வ நடவடிக்கைகளை நாம் நாட வேண்டும் என்பதையே சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இவ்விடயத்தை ஒட்டியும் டக்ளஸ் தேவானந்தா எம்.பியும் ஒரு கருத்தைச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

*"அரசியல் கைதிகளின் விடுதலைக்கான கோரிக்கையை நாங்கள் சிறைச்சாலை வரைக் கொண்டு வந்திருக்கிறோம். அதற்கு அப்பால் நாடாளுமன்ற உறுப்பினர்களே இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஆக்கபூர்வ முயற்சியை எடுக்க வேண்டும்"* - என்று அநுராதபுரம் சிறை வரை சளைக்காமல் நடைப் பயணப் போராட்டம் நடத்திய யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் கூறிய கருத்தை டக்ளஸ் சுட்டிக் காட்டுகின்றார்.

ஆகவே, சகல தமிழ்க் கட்சிகளும் ஒன்றிணைந்து - ஒன்றுபட்டு - ஒருபலமாக, வலுவுடன் அரசுடன் நேரடியாக ஊடாடுவதன் மூலமே இதில் சிறந்த பயனை - தீர்வை - பெறலாம் என்கிறார் டக்ளஸ்.

நல்லாட்சி அரசுக்கு நிபந்தனையற்ற விதத்தில் முண்டு கொடுத்து நிற்கும் தமிழ்க் கூட்டமைப்பினால், தமிழ்க் கைதிகளின் நிரந்தர விடுதலை விடயத்தில் அரசைத் தனித்து வழிக்குக் கொண்டு வர முடியாவிட்டால் -

நல்லாட்சி அரசுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்து அதனை வழிக்குக் கொண்டு வரும் விதத்தில் அதைப் பகைக்கவும் முடியாது என்ற இக்கட்டில் கூட்டமைப்பு சிக்கியிருக்குமானால் -

கூட்டமைப்புக்கு வெளியில் நிற்கும் ஏனைய தமிழ்க் கட்சிகளையும் ஒன்றிணைத்துக் கொண்டு - களத்தில் இறங்கி ஒரு கை பார்ப்பதே கூட்டமைப்பின் வழியாக இருக்க வேண்டும். அதுவே, சரியான - நியாயமான - மார்க்கமும் கூட.

கைதிகள் விடயத்துக்குத் தீர்வு காணக் கூட்டமைப்பு எம்.பிக்களே தங்களுக்குள் ஒன்று கூடித் தெளிவான கலந்தாய்வுகளைச் செய்யவில்லை என அநுராதபுரம் சிறை வரை நடைபயணம் சென்ற பல்கலை மாணவர்கள் குறிப்பிட்டுள்ளமையையும் டக்ளஸ் தேவானந்தா நினைவு படுத்துகின்றார்.

இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது பங்காளிக் கட்சிகளிடையே கூடப் பேச்சு நடத்தாத போது, வெளியில் உள்ள ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் பேசமா என்று கேள்வி எழுப்புகின்றார் டக்ளஸ். அதில் கருத்து இருப்பதாகவேபடுகிறது.

இது விடயத்தில் என்ன செய்யப் போகிறது கூட்டமைப்புத் தலைமை?

# வவுனியா வடக்கு ஒருங்கிணைப்புக் குழு குடிதண்ணீர் பிரச்சினை குறித்து ஆராய்வு



வவுனியா, ஒக். 17

வவுனியா வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நெடுங்கேணி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் புனர்வாழ்வு மீள்குடியேற்றம் வடக்கு அபிவிருத்தி பிரதி அமைச்சர் காதர் மஸ்தான் மற்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஆகியோரின் இணைத் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்குதல், இப்பகுதியில் பரவும் சிறுநீரகப் பிரச்சினைகளுக்குத் தீர்வாகக் குடிதண்ணீரைச் சுகாதாரப் பரிசீலனைக்கு உட்படுத்தி பயன்படுத்தல், விவசாயிகள் யானைகளால் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வாக மின்சார வேலியமைத்தல் மற்றும் அமைச்சுகளால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட திட்டங்களின் நிலைமைகள் தொடர்பில் ஆராயப்பட்டு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் வவுனியா ஐ.தே.க.அமைப்பாளர் கருணாதாஸ, வவுனியா வடக்கு பிரதேச சபை தவிசாளர் இ.தணிகாசலம், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள், அரச உயர் அதிகாரிகள், பொலிஸார், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-100)

# மாகாண சபை உறுப்பினரின் உதவியில் 35 பேருக்கு வாழ்வாதாரத் திட்டங்கள்



யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட 35 பயனாளிகளுக்கு, மாகாண சபை உறுப்பினர் இ.ஜெயசேகரத்தின் நிதியொதுக்கீட்டில் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் இந்த வாழ்வாதார உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு யாழ்ப்பாணம் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது மாகாண சபை உறுப்பினர் இ.ஜெயசேகரத்தின் மாதாந்த சம்பளப் பணம் மற்றும் குறித்தொதுக்கப்படும் நிதியில் இருந்து யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தினால் தெரிவு செய்யப்பட்ட 35 பயனாளிகளுக்கு 8 இலட்சம் ரூபா பெறுதிமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

வடக்கு மாகண சபை உறுப்பினர் இ.ஜெயசேகரம், மாகாண சபைக்குள் உள்வாங்கப்பட்ட காலத்திலிருந்து தனக்கு கிடைக்கும் மாதாந்தச் சம்பளம் மற்றும் உறுப்பினர்களுக்கான குறித்தொதுக்கப்படும் நிதியிலிருந்து பல்வேறு வாழ்வாதார உதவிகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-07)

# சபரிமலை விவகாரம்: வவுனியாவில் பேரணி




வவுனியா, ஒக். 17

சபரிமலை ஐயப்ப சுவாமிகளை தரிசனம் செய்வதற்கு இளம் பெண்களுக்கு அனுமதி வழங்கிய இந்திய உயர் நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து ஐயப்ப பக்தர்களால் நேற்று முன்தினம் வவுனியாவில் மாபெரும் கண்டனப் பேரணியொன்று நடத்தப்பட்டது.

வன்னி மாவட்ட ஐயப்ப சுவாமிகள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்போராட்டம், வவுனியா கந்தசாமி கோயில் முன்றிலில் ஆரம்பமாகி பசார் வீதி வழியாகச் சென்று அங்கிருந்து மாவட்ட செயலகத்தை அடைந்தது.

இதன்போது 10 வயது தொடக்கம் 55 வயது வரையுள்ள பெண்கள் சபரிமலைக்குச் செல்லக்கூடாது என்ற விதிமுறையை மீறி, அனைத்துப் பெண்களும் சபரிமலை சென்று ஐயப்ப சுவாமிகளைத் தரிசிக்க முடியுமென இந்திய உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை மீளப்பெறக் கோரி இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், 'கெடுக்காதே கெடுக்காதே இந்துக்களின் பாரம்பரியத்தைக் கெடுக்காதே, சபரிமலை புனிதத்தை கெடுக்காதே', 'மாற்று மாற்று தீர்ப்பை மாற்று' என்ற கோசங்களை எழுப்பியவாறு மாவட்ட செயலகத்தைச் சென்றடைந்த ஐயப்ப பக்தர்கள், அரசாங்க அதிபர் ஐ.கனீபாவைச் சந்தித்து இந்தியத் தூதரகத்தில் இவ்விடயம் தொடர்பில் அறிவிக்குமாறு கோரி மகஜர் ஒன்றையும் கையளித்திருந்தனர். (ஐ-100)

# எலிக் காய்ச்சல் பரவும் அபாயம்

கொழும்பு, ஒக். 17

தற்போது நிலவும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக லெப்டோஸ்பைரோஸிஸ் என்ற எலிக் காய்ச்சல் நோய் பரவும் வீதம் அதிகமாகக் காணப்படுவதாகச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி கடந்த 12 தினங்களுக்குள் 68 பேருக்கு இந்த எலிக்காய்ச்சல் தொற்றியுள்ளதாக சுகாதார அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இவ்வருடத்தில் ஒக்டோபர் 12 வரையான காலப் பகுதிக்குள் சுமார் 3303 எலிக் காய்ச்சல் நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டத்திலேயே அதிகமான நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர் எனவும், அங்கு 555 பேர் எலிக்காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

## நாளை

18.10.2018
வியாழக்கிழமை
நட்சத்திரம்: திருவோணம் பி.இ. 1.35 வரை
திதி : நவமி பி.ப. 3.55 வரை
சுபநேரம் : 7.32 - 9.02 வரை
இராகுகாலம் : 1.32 - 3.02 வரை

# விக்கி தலைமையில் மாற்று அணி வெகுவிரைவில் உருவாக்குவோம்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. அறிவிப்பு



வவுனியா, ஒக்ரேபர் 17

**வடக்கு மாகாண முதலமைச்சர் தலைமையிலான மாற்று அரசியல் அணியொன்றை விரைவில் உருவாக்குவோம் என வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.**

**வவுனியா சிவபுரத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப் பொன்றின்போதே அவர் இவ்வாறு கூறினார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2015 இல் ஆட்சி மாற்றம் ஒன்றைக்கொண்டு வந்தது. எந்த நிபந்தனையும் இல்லாமல் 3 வரவு – செலவுத் திட்டத்திற்கு ஆதரவு வழங்கியுள்ளது.

மக்கள் விழிப்படையாதவரை ஏமாற்றும் ஒரு கூட்டம் தொடர்ந்தும் ஏமாற்றிக்கொண்டே இருக்கும். எமது கிராமங்கள் அபிவிருத்தி அடைய வேண்டுமாக இருந்தால் அரசுடன் பேரம் பேசாது எதனையும் சாதிக்கமுடியாது.

எதிர்க்கட்சித் தலைவர் தலைமையிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களும் கடந்த 16 வருடங்களாக மக்களைப் புறந்தள்ளிவிட்டு சுயநலமாகச் சென்றுகொண்டிருக்கின்றனர். ஆகவே அடுத்து என்ன தெரிவு என மக்கள் கேட்கலாம்.

அதற்காகவே மாற்றுத்தெரிவொன்று உள்ளது. வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் தலைமையில் அவரது கரங்களைப் பலப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

அவர் எமது மக்களின் தேவைகளுக்காகவும் உரிமைகளுக்காவும் இன்றும் உறுதியாகக் குரல் கொடுத்துக்கொண்டிருப்பவர். ஆகவே அவரது கரங்களைப் பலப்படுத்தி அடுத்த முக்கிய மாற்று அரசியல் அணியொன்றை உருவாக்குவோம்.

சம்பந்தன் தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசின் அடிமைகளாக அல்லது அரசுக்கு முண்டு கொடுக்கும் ஆள்களாக போகின்றனர் என்பதற்காக நாம் இதில் இருந்து ஒதுங்க முடியாது.

தமிழ் மக்களுக்கு மாற்று அரசியல் தலைமையொன்று தேவை. அதனை நாம் வெகுவிரைவில் உங்களது ஒத்துழைப்போடு உருவாக்குவோம். அதற்கான வேலைகளை நாம் செய்துகொண்டிருக்கின்றோம் – என்றார். (ஐ)

## கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மற்றொரு மகப்பேற்று நிபுணர்

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் நேற்று இரண்டாவது மகப்பேற்று மருத்துவநிபுணரும் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் கடந்த சில மாதங்களுக்கு முன் மகப்பேற்று வைத்திய நிபுணர் இல்லாத நிலையில் கர்ப்பிணித் தாய்மார்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர். இந்த நிலையில் கடந்த செப்ரெம்பர் 17ஆம் திகதி மத்திய சுகாதார அமைச்சினால் மகப்பேற்று வைத்திய நிபுணர் டி.எல்.டபிள்யூ. குணவர்த்தன நியமிக்கப்பட்டிருந்தார்.

இதன் தொடர்ச்சியாக மத்திய சுகாதார அமைச்சினால் மேலும் ஒரு மகப்பேற்று நிபுணர் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டுள்ளார். வைத்தியர் எம்.ஆர். விதானதந்திரிகே நேற்றுக் கிளிநொச்சி வைத்தியசாலையில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

இந்த நியமனத்துடன் கிளிநொச்சி வைத்தியசாலையில் இரண்டு மகப்பேற்று நிபுணர்கள் கடமையில் இருப்பார்கள் எனச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

## நீர்க் கட்டண அதிகரிப்பு; ஆராயக் குழு நியமனம்

கொழும்பு, ஒக். 17

நீர்க் கட்டணத்திருத்தம் தொடர்பில் ஆராய்வதற்காக விசேட குழுவொன்றுநியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

3 வருடத்துக்கு ஒரு தடவை நீர்க் கட்டணம் அதிகரிக்கப்பட வேண்டிய நிலையில், கடந்த 6 வருடங்களாக நீர்க் கட்டணத்தில் எவ்வித திருத்தங்களும் முன்னெடுக்கப்படவில்லை.

இந்த நிலையிலேயே நீர்க் கட்டணத்தை அதிகரிப்பது குறித்து ஆராய இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்தக் குழுவில் நீர் வழங்கல் அமைச்சின் உயர் மட்ட அதிகாரிகள், நிதியமைச்சு, ஜனாதிபதி அலுவலகம், பிரதமர் அலுவலகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகளும் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குழுவால் தயாரிக்கப்படும் அறிக்கை எதிர்வரும் வாரங்களில் தம்மிடம் கையளிக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

இதேவேளை, எரிபொருள் விலை உயர்வுடன், மின்சக்தித் துறைக்கு ஏற்பட்டுள்ள தாக்கம் குறித்து ஆய்வு செய்வதற்கு, அடுத்த வாரத்திற்குள் விசேட குழுவொன்றை அமைக்கவுள்ளதாக மின்சக்தி மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க அமைச்சு தெரிவித்துள்ளது.

எரிபொருளின் விலை அதிகரிப்புக்கு அமைய, மின் கட்டணத்தையும் அதிகரிக்கவேண்டுமா என்பது தொடர்பில் இதன்போது ஆராயப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் கலாநிதி சுரேன் பட்டகொட குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## எமில் ரஞ்சனின் மறியல் நீடிப்பு

கொழும்பு, ஒக். 17

2012ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற படுகொலை தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் சிறைச்சாலைகள் ஆணையாளர் எமில் ரஞ்சனின் விளக்கமறியல் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பிலான வழக்கு நேற்றுக் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போதே சந்தேக நபரை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்புபிரதானநீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதேவேளை, இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்த பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் முன்னாள் இன்ஸ்பெக்டர் நியோமல் ரங்கஜீவ தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவுக்கமைய அவர் கடந்த 25ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆயிரம் ரூபா சம்பள உயர்வு கோரி தொழிலாளர் மறியல் போராட்டம்



ஹற்றன், ஒக். 17

ஆயிரம் ரூபா சம்பள உயர்வுகோரி ஹட்டன், செனன் தோட்டத் தொழிலாளர்கள் நேற்றுக் காலை சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்காரணமாக ஹற்றன் – கொழும்பு பிரதான வீதி ஊடான போக்குவரத்து சிறிது நேரம் ஸ்தம்பிதமடைந்தது.

கூட்டு ஒப்பந்தம் தொடர்பில் தொழிற்சங்கங்களுக்கும், முதலாளிமார் சம்மேளனத்துக்குமிடையே நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சு தோல்வியடைந்த நிலையில், தொழிலாளர்களின் பலத்தைக் காட்டும் வகையிலேயே இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கறுப்புக்கொடிகளை ஏந்தியவாறு பிரதான வீதியில் களமிறங்கிய தொழிலாளர்கள், வீதியில் அமர்ந்து நியாயமான சம்பள உயர்வுகோரி கோஷம் எழுப்பியிருந்தனர்.

இதையடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த ஹற்றன் பொலிஸார், தொழிலாளர்களுடன் பேச்சு நடத்தியதையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர். போக்குவரத்தும் வழமைக்குத் திரும்பியது.

ஆயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்கப்படாவிட்டால், மலையகமெங்கும் போராட்டம் வெடிக்கும் எனவும் தொழிலாளர்கள் இதன்போது எச்சரிக்கை விடுத்தனர்.

இதேவேளை, சம்பள உயர்வு கோரி கடந்த சில தினங்களாகவே மலையகத்தின் பல பகுதிகளிலும் தொடர்ச்சியாகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மருந்து வில்லை தொண்டையில் சிக்கியதால் சிறுவன் உயிரிழப்பு

மருந்து வில்லை தொண்டையில் சிக்கி, ஐந்து வயதுச் சிறுவன் உயிரிழந்த சம்பவமொன்று, கலேவெல நகரில் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு, சிறுவனின் தொண்டையில் மருந்து வில்லை சிக்கியதையடுத்து, உடனடியாக கலேவெல பிரதேச வைத்தியசாலைக்குப் பெற்றோர் அழைத்துச் சென்றுள்ளனர். சிகிச்சை பலனின்றிச் சிறுவன் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளானென பொலிஸார் தெரிவித்தனர்.

கலேவெல – ஜயதிலக்க மாவத்தையைச் சேர்ந்த, மிதும் சனுஜ கங்கொடவத்த என்ற சிறுவனே, இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

கலேவெல ஆரம்பப் பாடசாலையில் கல்விப் பயிலும் இந்தச் சிறுவனுக்கு, சுகாதாரப் பிரிவினரால் நேற்று முன் தினம் பூச்சி மருந்து வழங்கப்பட்டுள்ளது.

சிறுவனின் தாய், அந்த மருந்து வில்லையை, நேற்று முன் தினம் இரவு, இரு துண்டுகளாக்கிச் சிறுவனுக்குப் பருக கொடுத்தபோதே, இந்த அசம்பாவிதம் நேர்ந்துள்ளது.

சம்பவம் தொடர்பில், கலேவெல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)



# 2016 அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் சீனாவும் தலையிட்டது என்கிறார் டிரம்ப்

## அவரின் திடீர் குற்றச்சாட்டால் பரபரப்பு

வாஷிங்டன், ஒக்17

அமெரிக்கஜனாதிபதிதேர்தலில் சீனாவும் தலையிட்டது என்று ஜனாதிபதி டிரம்ப் திடீரென குற்றம் சாட்டியுள்ளார்.

2016 ஆம் ஆண்டு நடந்த அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ரஷ்யாவின்தலையீடுஇருந்ததாக ஜனாதிபதி டிரம்ப் தொடர்ந்து கூறி வருகிறார். இதற்கிடையே, கடந்த மாதம் டிரம்ப் சீனா மீது ஒரு குற்றச்சாட்டை முன் வைத்தார். தான் அமெரிக்க ஜனாதிபதியாக இருப்பதைசீனாவிரும்பவில்லை என்றும், அதனால் இந்த ஆண்டுக்குள்(2018) அமெரிக்காவில் இடைத் தேர்தலை நடத்துவதற்கு சீனா முயற்சித்து வருவதாகவும் பரபரப்பு குற்றம் சாட்டினார். இதை உடனடியாக சீனா மறுத்தது.

இந்த நிலையில், அமெரிக்காவின் சி.பி.எஸ். செய்திச் சேனலுக்கு ஜனாதிபதி டிரம்ப் அளித்த ஒரு மணி நேர பேட்டி கடந்த ஞாயிறு இரவு ஒளிபரப்பப்பட்டது. அதில் சீனா மீது அவர் புதியதொரு குற்றச்சாட்டை கூறினார். 2016 ஆம் ஆண்டு நடந்த அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில், சீனாவின் தலையீடும் இருந்ததாக அப்போது பகிரங்கமாக தெரிவித்தார். சீனா மீது டிரம்ப் இதுபோன்ற குற்றச்சாட்டை முன்வைப்பது இதுவே முதல் முறையாகும்.

அவர் கூறுகையில், அமெரிக்க தேர்தலில் ரஷ்யா தலையிட்டது. அதை விட அதிகமாக சீனாவும் இதில் தலையிட்டது என்றே நினைக்கிறேன். இதுதான் மிகப்பெரிய பிரச்சினை. இப்படி நான் சொல்வதால் ரஷ்யாவின் மீதுகூறியகுற்றச்சாட்டில்இருந்து விலகி செல்கிறேன் என்று அர்த்தம் அல்ல. அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ரஷ்யா தலையிட்டது. ஆனால் இதில் சீனாவின் குறுக்கீடும் இருந்தது என்றுதான்சொல்கிறேன்என்றார்.

அமெரிக்கஜனாதிபதிதேர்தலில் ரஷ்யாவின் தலையீடு இருந்ததா என்பதுபற்றி முன்னாள் எவ்.பி.ஐ. இயக்குனர் றொபேர்ட் முல்லர் தலைமையிலான குழு விசாரணை நடத்தி வருகிறது. இந்த விசாரணையில் இருந்து டிரம்பின் சட்ட மா அதிபர் ஜெப் செசன்ஸ் அண்மையில் திடீரென விலகிக் கொண்டார்.

இதுபற்றி எழுப்பப்பட்ட கேள்விக்கு டிரம்ப் பதில் அளிக்கையில், இது நிச்சயம் எனக்கு மிகுந்த வேதனை அளிக்கும்விடயம். ஜெப்செசன்ஸ் ஏன் இந்த விசாரணையில் இருந்து விலகிக்கொண்டார் என்பதுஎனக்குத்தெரியவில்லை. இந்தவிடயத்தில்நான்சரியாகவே செயல்பட்டேன் என்பதை பெரும்பாலானோர் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்.

ரஷ்யாவின் தலையீடு தொடர்பான விசாரணையை நீங்கள் ரத்து செய்யப்போவதாக கூறப்படுகிறதே? என்ற மற்றொரு கேள்விக்கு, அதுபோன்ற வாக்குறுதி எதையும் நான் அளிக்கவில்லை. அதுமாதிரியானநோக்கம்எதுவும்என்னிடம் இல்லை என்பதை நிச்சயமாக கூற முடியும். ஆனால், இந்த விசாரணை மிகவும் நியாயமற்ற ஒன்றாகும். ஏனென்றால் இதில் எந்த விதத்திலும் கூட்டுச் சதி இல்லை என்று மறுத்தார்.

உங்களுக்கு தேர்தலில் உதவும்படி ரஷ்யாவை அழைத்தீர்களா? என்று கேட்டபோது, எனக்கு தேர்தலில் உதவி செய்யும்படி ரஷ்யாவை அழைத்தேன் என்பதை நீங்கள் உண்மையிலேயே நம்புகிறீர்களா?... அவர்களால்எனக்கு உதவ முடியாது என்பதுதான் உண்மை. ரஷ்யாவை உதவிக்கு அழைத்தேன் என்று கூறுவது மிகவும் கேலிக்குரியது என்று டிரம்ப் பதில் அளித்தார்.

# இந்தியாவின் பேரழிவு ஆயுதங்களால் தெற்காசிய அமைதிக்கு அச்சுறுத்தல்

## ■ இப்படிக் குற்றஞ் சாட்டுகிறது பாகிஸ்தான்

இஸ்லமாபாத்,ஒக்.17

இந்தியா பெரும் அழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்களை வாங்கிக் குவிப்பது தெற்காசியா அமைதிக்கு அச்சுறுத்தலாக இருப்பதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாதில் நடைபெற்ற நிகழ்ச்சிஒன்றில்கலந்துகொண்டு பேசிய அந்நாட்டு அதிபர் ஆரிப் ஆல்வி இவ்விடயம் குறித்துக் குறிப்பிட்டார். அப்போது அவர் கூறியவை வருமாறு:

தெற்காசியப் பிராந்தியத்தில. பாதுகாப்பு தொடர்பாக ஸ்திரத்தன்மை இருக்கவேண்டும் என்று பாகிஸ்தான் விரும்புகிறது. இந்த விடயத்தில் பாகிஸ்தான் மிகவும் பொறுப்புணர்வுடன்



செயல்பட்டு வருகிறது.

ஆனால், இந்தியா தனது இராணுவத்தில் பேரழிவு ஆயுதங்களைதொடர்ந்துசேர்த்து வருகிறது. இது தெற்காசியப் பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மைக்குஅச்சுறுத்தலாகஉள்ளது. அதே நேரத்தில் தனது பிராந்திய ஒருங்கிணைப் பகுதிகளை பாதுகாப்பதிலும், இறையாண்மையைக் காப்பதிலும் பாகிஸ்தான் உறுதியாக உள்ளது. இதில் யாருக்கும் எந்த சந்தேகமும் வேண்டாம் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், அமைதியை மேற்கொள்ளும் பாகிஸ்தானின் முயற்சிகள் புறம் தள்ளப்பட்டன எனக் கூறியுள்ள ஆரிப் ஆல்வி, . இந்தியாதான் தெற்காசியாவில் முதல்முறையாக அணு ஆயுத சோதனையை நடத்தி, அணு ஆயுதம் இல்லாத பகுதி என்ற பெருமையைக் கெடுத்தது. அதே நேரத்தில் தெற்காசியப் பிராந்தியத்தை அணு ஆயுதம் இல்லாத பகுதியாக உருவாக்க பாகிஸ்தான் விருப்பத்துடன்தான் உள்ளது என்றார்.

## ■ 15ஆண்டு காலம் சிறைவாசம் அனுபவித்த பின்னர்

# அமெ. இரட்டைக் கோபுரத் தாக்குதல் குற்றவாளியை விடுவித்தது ஜேர்மனி

கடந்த 2001ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11ஆம் தேதி நடந்த அமெரிக்க இரட்டை கோபுரத் தாக்குதலில் தொடர்புடையவரின்கூட்டாளியை சிறையிலிருந்து ஜேர்மனி விடுதலை செய்யவுள்ளது.

மொரோக்கோவைச் சேர்ந்த மவுனி அல் மொசாஸாடெக், இரட்டை கோபுர தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட விமானத்தில் இருந்த பயணிகளின் உயிரிழப்பதற்கு காரணமாக இருந்த குற்றச்சாட்டிற்காக சுமார்15ஆண்டுகளைசிறையில் கழித்துள்ளார்.

தனது தண்டனைக் காலத்தில் பெரும்பகுதியை அனுபவித்து விட்ட இவர் தற்போது மொரோக்கோவிற்கு நாடு கடத்தப்படுகிறார்.

தனக்கும், இரட்டைக் கோபுரத் தாக்குதல் சம்பவத்துக்கும் தொடர்பில்லை என்று மொசா



ஸாடெக் தொடர்ந்து கூறி வந்தாலும், இந்தத் தாக்குதலை நடத்தியவர்களின் நண்பராக இவர் இருந்தார் என்று குற்றம்சாட்டப்பட்டது.

# டிரம்ப்பின் மீது ஆபாச நடிகை தொடர்ந்த வழக்குத் தள்ளுபடி

அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப்புக்கு எதிராக ஆபாச நடிகை தொடர்ந்த வழக்கை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

டிரம்ப் தன்னுடன் காதலில் இருந்தார் எனவும் தாங்கள் இருவரும் பலமுறை உறவு வைத்துள்ளனர் எனவும் பிரபல ஆபாச நடிகை ஸ்ட்ரோமி டேனியல்ஸ்கூறியிருந்தார்.

ஜனாதிபதி மீதான இந்த குற்றச்சாட்டிற்கு வெள்ளை மாளிகைமறுப்புதெரிவித்திருந்தாலும், இது குறித்து பேசுவதை ஸ்ட்ரோமி நிறுத்தவில்லை.

இந்த நிலையில் டிரம்புடன்உள்ளஉறவுகுறித்து வெளியில் ஏதும் கூறக் கூடாது, அமைதியாக இருக்க வேண்டும் என ஒரு மனிதன் லாஸ்வேகாசில் வைத்துத் தன்னை



மிரட்டினார் எனவும் டேனியல்ஸ் கூறினார்.

இந்த நிலையில் 2016 ஆம் ஆண்டு அதிபர் தேர்தலுக்கு முன்னதாக ஆபாசப்பட நடிகை ஸ்ட்ரோமி டேனியல்ஸுக்கு தனது வழக்கறிஞர் பணம் வழங்கினார் என்று கூறப்படுகின்றமை குறித்துத் தனக்கு தெரியாது என டிரம்ப் தெரிவித்து இருந்தார்.

தற்போது இந்த விவகாரம் தொடர்பாக முதன் முதலில் டிரம்ப் பேசியுள்ளார். ஏன் உங்கள் வழக்கறிஞர்பணம்கொடுத்தார் என்று கேட்டதற்கு அதற்கு நீங்கள் அவரைத்தான் கேட்க வேண்டும் என்றார் டிரம்ப்.

அமெரிக்க அதிபர் தேர்தலுக்குமுன்பாக2016 ஆம் ஆண்டு இதை பற்றி பேசாமல் இருக்க ஒரு லட்சத்து 30,000 அமெரிக்க டாலர்கள் வழங்கப்பட்டதாக நடிகை தெரிவித்திருந்தார்.

டிரம்பிற்கு எதிராக ஸ்ட்ரோமி டேனியல்ஸ் லாஸ் ஏஞ்சல்ஸில் மாவட்ட நீதிமன்றத்தில் அவதூறுவழக்கு தொடர்ந்தார். இதனை நீதிபதி எஸ் ஜேம்ஸ் ஒடெரோ, நேற்றுதள்ளுபடிசெய்தார். மேலும் டிரம்ப்பின் நீதி மன்றச் செலவையும் செலுத்தஆபாசநடிகைக்கு நீதிபதி உத்தரவிட்டு உள்ளார்.

# மீண்டும் சர்சையைக் கிளப்பும் கிளிண்டன் - மோனிகா காதல்

வாஷிங்டன்,ஒக்.17

அமெரிக்க முன்னாள் அதிபர் பில் கிளிண்டன் – மோனிகா லெவின்ஸ்கி காதல் விவகாரம் குறித்து மீண்டும் சர்ச்சை எழுப்பியதற்கு ஹிலாரி அதிரடியாக பதில் அளித்துள்ளார்.

அமெரிக்க முன்னாள் அதிபர் பில் கிளிண்டன். இவர் பதவி வகித்த போது, 1998 ஆம் ஆண்டில் வெள்ளை மாளிகையில் பணிபுரிந்த பெண் ஊழியர் மோனிகா லெவின்ஸ்கி – பில் கிளிண்டன் காதல் விவகாரம் சூடுபிடித்தது. அப்போது இந்த செய்தி பரபரப்பை ஏற்படுத்தியது.

அதை தொடர்ந்து பில் கிளிண்டனை அதிபர் பதவியில் இருந்து நீக்க வகை செய்யும் பிரேரணையை எதிர்க்கட்சியாக இருந்த குடியரசு கட்சி கொண்டு



வந்தது. ஆனால் அது தோற்கடிக்கப்பட்டது.

தற்போது 'மீடூ' விவகாரம் சர்வதேச அளவில் சூடு பிடித்துள்ள நிலையில் கிளிண்டன. – மோனிகா லெவின்ஸ்கியின் காதல் விவரம் குறித்த பிரச்சினை 20 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் கிளம்பியுள்ளது.

நியூயார்க்கை சேர்ந்த குடியரசுகட்சியின்செனட்டர் கிர்ஸ்டன் கில்பிராண்டு அளித்த பேட்டியில் கூறும் போது, 'செக்ஸ்' பிரச்சினையில் சிக்கிய கிளிண்டன் அப்போதேதனதுபதவியில் இருந்து விலகியிருக்க வேண்டும். தனது அதிகாரத்தை பயன்படுத்தி மோனிகா லெவின்ஸ்கியுடன் 'செக்ஸ்'ஸில் ஈடுபட்டார் எனக் குற்றம் சாட்டினார்.

அதற்கு கிளிண்டனின் மனைவியும், அமெரிக்க முன்னாள் வெளியுறவு மந்திரியுமான ஹிலாரி கிளிண்டன் பதில் அளித்து இருக்கிறார். ''பில் கிளிண்டன் தனது அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தவில்லை. அதை என்னால் நிச்சயமாகக் கூற முடியும். இப்பிரச்சினையின் போது மோனிகா லெவின்ஸ்கிக்கு 22 வயது. அவர் 'மேஜர்' ஆக இருந்தார். அவரது விருப்பத்தின் பேரில்தான் கிளிண்டன் அவர் மீது காதல் வயப்பட்டிருந்தார் எனத் தெரிவித்துள்ளார்.

# பெரும் பரபரப்புகளுக்கு மத்தியில் சபரிமலை கோயில் இன்று திறப்பு



திருவனந்தபுரம், ஒக்.17

சபரிமலைஐயப்பன்கோயிலில் அனைத்துவயதுபெண்களையும் அனுமதிக்கலாம் என்ற உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு கடும் எதிர்ப்பு நிலவி வரும் நிலையில், ஐப்பசி மாத பூஜைகளுக்காக கோயில் நடை இன்று மாலை திறக்கப் படுவதால் பெரும் பரபரப்பு நிலவுகிறது.

திருவனந்தபுரத்தில்தலைமைச் செயலகம் நோக்கி பேரணி உள்ளிட்ட போராட்டங்கள்தீவிரம டைந்துள்ளன. பிரச்சினையின் தீவிரத்தைக் குறைக்க தந்திரி, பந்தளம் மன்னர் குடும்பத்துடன் நேற்றுப் திருவிதாங்கூர் தேவசம்போர்டு பேச்சு நடத்த இருந்தது. சபரிமலையில் அனைத்துவயதுபெண்களையும் அனுமதிக்கலாம் என உச்ச நீதி மன்றம் சமீபத்தில் தீர்ப்பளித்தது. இதற்கு நாடு முழுவதும் கடும் எதிர்ப்புக் கிளம்பி உள்ளது. குறிப்பாக, கேரளாவில் இந்த விவகாரம் பூதாகரமாக வெடித்துள்ளது. நிலைக்கல், பம்பையில் போராட்டம் நடத்தப்படும் என்றும், எதிர்ப்பை மீறி சபரிமலை வரும் பெண்கள் தடுத்து திருப்பி அனுப்பப் படுவார்கள் என்றும் பல்வேறு இந்து அமைப்பினர் எச்சரித் துள்ளனர்.

மேலும் கேரளா முழுவதும் பேரணி, ஆர்ப்பாட்டங்கள்நடந்து வருகின்றன. கம்யூனிஸ்ட் கட்சிகள் தவிர பா.ஜ.க.காங்கிரஸ் உள்பட அனைத்துகட்சியினரும், பெண்கள் அமைப்பினரும் போராட்டங்களில் பங்கேற்று வருகின்றனர்.

# ஆயிரம் கிலோ சொக்லேட்டில் உருவான துர்க்காதேவி சிலை

## நவராத்திரியை ஒட்டி கொல்கத்தா ஹோட்டலில்

கொல்கத்தா,ஒக்.17

கொல்கத்தாவில் உள்ளபிரபல உணவகத்தில் அமைக்கப் பட்டுள்ள ஆயிரம் கிலோ சொக்லேட்டால்ஆனதுர்காதேவி சிலை பக்தர்களை வெகுவாக கவர்ந்துள்ளது.

மேற்கு வங்காளம் மாநிலத்தில் ஆண்டுதோறும் நவராத்திரி மற் றும் துர்கா பூஜை பண்டிகை வெகுவிமரிசையாககொண்டாடப் பட்டு வருகிறது. இந்த ஆண்டின் துர்கா பூஜையின்போது பந்தல் அமைத்து துர்கா தேவி சிலைகளை நிர்மாணித்து பூஜைகளைசெய்யும்28ஆயிரம் குழுக்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் வீதம் 28 கோடி ரூபாய் பரிசுத்தொகையை மம்தா பானர்ஜி தலைமையிலான அம் மாநில அரசு அறிவித்தது.

இதைத் தொடர்ந்து மேற்கு வங்காளம் மாநிலத்தின் அனைத்துப்பகுதிகளிலும் வகை வகையான பந்தல்கள் அமைக் கப்பட்டு, துர்கா தேவியின் சிலைக்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் வழிபாடு நடத்தி வருகின்றனர்.

காய்கறிகளினால் ஆன துர்கா சிலை, சோளத்தால் ஆன துர்கா சிலை என ஒவ்வொருவரும் தனிபாணியில் சிலைகளை அமைத்துள்ளனர். அவ் வகையில், தலைநகர் கொல் கத்தாவில் உள்ள விமான நிலையத்தின் அருகே அமைந்தி ருக்கும் ஒரு பிரபல ஹோட்டலில் வைக்கப்பட்டுள்ள 10 அடி உயரத்தில் ஆயிரம் கிலோ சொக்லேட்டால் ஆனதுர்காதேவி சிலை பக்தர்களை வெகுவாக கவர்ந்துள்ளது.

வெந்நிற சொக்லேட்டால் ஆன இந்தசிலையை உருவாக்க அந்த ஹோட்டல் பணியாளர்கள் 12 நாள்கள் உழைத்தனர் எனத் தெரிய வந்துள்ளது.

# மொடல் அழகியைக் கொன்று உடலை சூட்கேஸில் அடைத்து எறிந்த மாணவன்

## மும்பையில் பரபரப்புச் சம்பவம்

மும்பை, ஒக்.17

மும்பையில் மொடல் அழகி ஒருவரைக் கொன்று சூட்கேஸுக் குள் அடைத்து வீதியில் வீசிச் சென்ற மாணவனைபொலிஸார் கைது செய்தனர். ராஜஸ்தான் மாநிலம் கோடாவைச் சேர்ந்தவர் யுவதி மான்சி தீக்ஷத். 20 வயதாகும் இவர், மொடல் ஆகும் ஆசையில்மும்பைவந்துள்ளார். இவரும் மும்பையில் பி.காம் படித்துக்கொண்டிருக்கும் சையத் என்பவரும் நெருக்கமாகப் பழகி வந்துள்ளனர். இந்நிலையில் அந்தேரி பகுதியில் உள்ள தனது வீட்டுக்கு வருமாறு மான்சியை சையத் அழைத்துள்ளார் . பின்னர் அங்கு சென்றபோது இருவருக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

வாக்குவாதம் முற்றியதால் ஒருகட்டத்தில் விரக்தியடைந்த சையத் அருகிலிருந்த இரும்பு கம்பியால் மான்சியைத் தாக்கி யுள்ளார். இதில் மயங்கி விழுந்த மான்சியின் கழுத்தை கயிறால் இறுக்கிகொன்றுள்ளார். பின்னர் மான்சியின் உடலை சூட்கேஸில் அடைத்துள்ளார். பிறகு டாக்ஸி ஒன்றை சையத் 'புக்' செய் துள்ளார். டாக்ஸியின் டிக்கியில் அந்த சூட்கேஸை வைத்து அடைத்து விட்டு விமான நிலையம் செல்ல வேண்டும் என்று சொல்லி சையத் புறப்பட்டுள்ளார். சிறிது தூரம் சென்றதும் வேறு வழியில் செல்லுமாறு டிரைவரிடம் கூறி யுள்ளார் சையத்.

கார் மலாடு அருகே சென்ற போது ஆள்கள் நடமாட்டம் இல்லாத இடத்தில் காரை நிறுத்த சொன்ன சையத், சூட்கேஸுடன் இறங்கிவிட்டு டாக்ஸி டிரைவரை அனுப்பிவிட்டார். பிறகு அந்த பகுதியின் ஓரத்தில் சூட்கேஸை வீசிவிட்டு யாருக்கும் தெரியாதது போல ஒட்டோவில் ஏறி சென்று விட்டார். அடுத்த சில நிமிடங் களிலேயே டாக்ஸி டிரைவர் அந்த இடத்துக்கு வந்து பார்த்தபோது சையத் கொண்டு வந்த சூட்கேஸ் ஓரத்தில் கிடப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார். இதுபற்றி உடனடியாகப் பொலிஸுக்குத் தகவல் அளித்தார். பின்னர் அங்கு விரைந்த காவல் துறையினர் சூட்கேஸைத் திற ந்துபார்த்தபோது உள்ளே இளம் பெண்ணின் உடல் இருப்பதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். பின்னர் விரைந்து செயல்பட்ட போலீசார், சையத் சென்ற ஆட்டோவை விரட்டிச் சென்று அவரைக் கைது செய்தனர்.

# கொலை, கற்பழிப்பு வழக்கில் சாமியாருக்கு ஆயுள் சிறை!



புதுடில்லி,ஒக்,17

கொலை மற்றும் கற்பழிப்பு வழக்கில் சாமியார் ராம் பாலுக்கு ஆயுள் தண்டனை வழங்கி ஹரியானா நீதிம ன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ஹரியானா மாநிலம் ரோதக் மாவட்டத்தைச் சேர்ந்தவர் ராம்பால் சிங் ஜடின். ஐ.டி.ஐ. டிப்ளமோ பட்டதாரியான இவர் ஹரியானாவில் நீர்ப்பாசனத் துறை இளநிலை என்ஜினீ யராக பணியாற்றி னார்.

திருமணமாகி மனைவி, 2 மகன், 2 மகள்கள் உள்ள நிலையில் திடீர் என்று ஆன்மீகத்தில் ஈடுபாடு கொண்டு சாமியாரானார். ஹரியானாவில் கரோதா கிராமத்தில் ஆசிரமம் தொடங்கினார். பின்னர் ஹரியானா முழுவதும் ஆசிரம ங்கள் தொடங்கி ஆன்மீக சேவையாற்றினார்.


இவர் ஆன்மீகம் தொடர்பாக இரு பிரிவினரிடையே மோ தலைத் தூண்டும் வகையில் பேசினார் எனக் கூறப்பட்டது. இதில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் கொல்லப்பட்டார். ஒருவர் காயம் அடைந்தார். இதையடுத்து சாமியார் மீது கொலை, கொலை முயற்சி வழக்கு தொடரப்பட்டது. ஆசிரமத்தில் பெண்களுக்கு பாலியல் தொல் லை கொடுத்தார் எனவும் புகார் கூறப்பட்டது.

இதையடுத்து பொலிஸார் ராம் பால் மீது வழக்குப் பதிவு செய்தனர். கடந்த 2014ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அவர்கைது செய்யப்பட்டார். அப்போது ஏற்பட்ட மோதலில் 5 பெண்கள் மற்றும் ஒரு குழந்தை பலியாகினர்.

ஹசார் கோர்ட்டில் அவர் மீதான பல்வேறு வழக்குகள் தனித்தனியாகவிசாரிக்கப்பட்டு வந்தன இதில் இரு வழக்கு களில் அவர் விடுதலை செய்யப்பட்டார். கொலை மற் றும் கற்பழிப்பு வழக்கில் அவருக்கு ஹிசார் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்துத் தீர்ப்புக் கூறியது.

சாமியார் ராம்பால் ஹிசார் சிறையில் அடைக்கப்பட் டுள்ளார். மற்ற வழக்குகள் விசாரணை தொடர்ந்து நடந்து வருகிறது.

# நேதாஜி உயிருடன் உள்ளாரா? விளக்கம் அளிக்குமாறு உத்தரவு



சுதந்திரப் போராட்ட வீரர் நேதாஜி சுபாஷ்சந்திரபோஸ் மரணம் அடைந்தாரா அல்லது உயிருடன் இருக்கிறாரா என்பது குறித்து விளக்கம் அளிக்கும் படி, தேசிய ஆவண காப்பகத்திற்கு, மத்திய தகவல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

நாட்டின் சுதந்திர போராட்ட காலத்தில், இந்திய தேசிய ராணுவம் என்ற அமைப்பை உருவாக்கி, அதில் இளைஞர்கள் பலருக்கும் ஆயுதப் பயிற்சி உள்ளிட்ட இராணுவ பயிற்சி அளித்தவர், சுபாஷ் சந்திரபோஸ். ஆங்கிலேயருக்குஎதிரான இவரது வீரம், தலைமைப் பண்பு ஆகிய வற்றால், 'நேதாஜி' என்ற அடை மொழியுடன் அழைக்கப்பட்டார்.

நேதாஜி வெளிநாட்டிற்குசென்ற போது, மர்மமான முறையில், விமான விபத்தில் இறந்தார் எனக் கூறப்படுகிறது. இவரது மரணம் குறித்த ஆவணங்கள், சமீபத்தில் வெளியிடப்பட்டன. எனினும், இதில் தனக்கு திருப்தி அளிக்கும் வகையிலான தகவல்கள் இடம் பெறவில்லை எனக் கூறி, சமூக ஆர்வலர், அவ்தேஷ் குமார் சதுர்வேதி, தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ், கேள்வி எழுப்பியுள்ளார்.

'நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், உயிருடன் இருக்கிறாரா அல்லது இறந்துவிட்டாரா என்பதை தெளிவுபடுத்த வேண்டும்' என, அவர், தன்மனுவில் கேட்டுள்ளார். நேதாஜி மரணம் குறித்த ரகசியங்கள் வெளியிடப்பட்டு, அது குறித்த ஆவணங்கள், மத்திய ஆவண காப்பகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என, மத்திய தகவல் ஆணையம் தெரிவித்துள்ளது. இதையடுத்து, சதுர்வேதி எழுப்பியுள்ள கேள் விகளுக்கு, உரிய ஆவணங் களுடன் பதில் அளிக்கும்படி, மத்திய ஆவண காப்பகத்திற்கு, தகவல் ஆணையம் உத்தர விட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir


# இலங்கைத் தமிழர் தரப்பு நியாயங்களை அலட்சியப்படுத்துவது இந்தியவுக்கு நல்லதல்ல

ஐ.நா.மனித உரிமை சபையின் 39ஆவது கூட்டத்தொடர் வேளையில், செப்டம்பர் 14ஆம் திகதி, நாடுகளிற்கு இடையிலான 'பதில் கூறும் உரிமையை' அவதானித்து கொண்டிருந்தேன். 'பதில் கூறும் உரிமை' என்பது ஒரு நாட்டையோ அல்லது ஓர் அரச சார்பற்ற அமைப்பையோ குறைகூறுவதாகவே அமையும்.

செப்டம்பர் 14ஆம் திகதி இடம்பெற்ற 'பதில் கூறும் உரிமை' என்பது பாகிஸ்தானிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான சொற்போராக காணப்பட்டதுடன், இந்தியாவிற்கு மிகவும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய வகையில் பாகிஸ்தானிய பிரதிநிதியின் குற்றச்சாட்டுக்கள் அமைந்திருந்தன.


எஸ்.வி.கிருபாகரன்

ஐ.நா.மனித உரிமை அரங்கில் எனது



இரண்டு தசாப்தங்களிற்கு மேலான பங்களிப்பில், நாடுகளிற்கு இடையிலான நூற்றுக்கணக்கான சொற்போரைக் கண்டுள்ளேன்.

இந்தியாவின் பிரதிநிதி பாகிஸ்தான் மீதான தனது குற்றச்சாட்டை கூறும் வேளையில், 'பாகிஸ்தான் கூறும் சுயநிர்ணய உரிமை என்பது, எல்லையைக் கடந்த பயங்கரவாதம் என்பதுடன் பாகிஸ்தான் அரசின் ஆதரவுடன் இராணுவ, நிதி மற்றும் உதவிகளுடன் இந்தியாவிற்குள் ஊடுருவப்படுகின்றனர்' என கூறினார்.

இதனை தொடர்ந்து உரையாற்றிய பாகிஸ்தான் பிரதிநிதி, இந்தியா கூறும் எல்லை கடந்த பயங்கரவாதம் என்பது முழு பொய் எனவும், தென் ஆசியாவை பொறுத்த வரையில் இந்தியாவே என்றும் பயங்கரவாதத்தை தனது சிறிய அயல் நாடுகளிற்கு வியாபித்து இருந்தது எனவும், இது சிலவேளைகளில் இந்திய ராஜதந்திரிகளின் ஞாபகத்திலிருந்து மறைந்திருக்கலாம் எனவும் கூறியுள்ளார்.

அத்துடன் இந்தியாவின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட பயங்கரவாத அமைப்பு ஒன்று கடற்படையை உருவாக்கியது எனவும், இவை இறுதியில் இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலைக்குக் காரணமாக அமைந்ததாகவும், இன்றும் இந்தியா தனது பயங்கரவாதத்திற்கான ஆதரவை, தனது அயல் நாடுகளில் மேற்கொண்டுள்ளதாகவும்' கூறினார்.

பாகிஸ்தான் பிரதிநிதி, நாட்டின் அமைப்பின் பெயர்களை கூறுவதை தவிர்த்து இருந்தாலும் இவை ஸ்ரீலங்காவையும் தமிழீழ விடுதலைபுலிகளையும் குறிப்பிட்டார் என்பது யாவருக்கும் தெட்டதெளிவாகியது.

ஸ்ரீலங்காவின் இன்றைய நிலைக்கு ஈழத்தமிழரும், சிங்களவரும் இந்தியாவைக் குறைகூறுவது தவிர்க்க முடியாத ஒன்றாகியுள்ளது.

1980இல் இல்லையேல் அதற்கு முன்னைய காலப்பகுதிகளில் இந்தியா தனது ஸ்ரீலங்கா மீதான வெளிநாட்டு கொள்கையில், உண்மை, நீதி ஆகியவற்றின் அடிப்படையில் ஓர் அரைநடு நிலையாக காணப்பட்டது.

அவ்வேளையில், இந்தியா வடக்கு மற்றும் கிழக்கு வாழ் ஈழத்தமிழரின் சுயநிர்ணய உரிமையில் அக்கறை காட்டுவதாக சிங்கள பௌத்தவாதிகள் குறைகூறினார்கள்.

துரதிஷ்டவசமாக, இந்தியாவின் பிரதமர் இந்திரா காந்தியின் மரணத்தின்பின்னர், ராஜீவ்காந்தி பிரதமரானதைத் தொடர்ந்து, இந்தியாவின் ஸ்ரீலங்கா மீதான வெளிநாட்டுக் கொள்கை தலைகீழாக மாறியுள்ளது.

உண்மையை கூறுவதனால், இந்தியப் பிரதமர், கொள்கை வகுப்பாளர்,



விசேடமாக கேரோளாவை சார்ந்தவர் சிலரது பலவீனம் காரணமாக, சிங்கள – பௌத்த அரசியல்வாதிகள் இந்தியாவின் முக்கிய புள்ளிகளை தமது அதிகார மையத்திற்குள் கையாண்டு, தமக்கு தேவையானவற்றை சாதித்து வருகின்றனர்.

ஒருவரது பலவீனத்தை பாவித்து தமது வெற்றியை அடைவதில் சிங்கள பௌத்தவாதிகளை தவிர வேறு யாரும் இவ்வுலகில் இருக்க முடியாது. மாற்றமடைந்த இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை என்பது, இந்தியாவிற்கோ அல்லது ஈழத்தமிழர்களிற்கு நன்மை பயக்கும் விடயமாக காணப்படவில்லை.

### இலங்கை - இந்திய ஒப்பந்தம்

இவ்கொள்கையின் அடிப்படையில் 1987ஆம் ஆண்டு ஜுலை 29ஆம் திகதி இலங்கை – இந்திய ஒப்பந்தமாகியது. இந்த ஒப்பந்தத்தின் பெறுபேறு என்பது மிகவும் மோசமான மனித உரிமை மீறல்களுடன், கோடிக்கணக்கான சொத்துக்களையும் வடக்கு மற்றும் கிழக்குவாழ் மக்கள் இழக்க நேரிட்டது.

முதலாவதாக, இலங்கை – இந்தியா ஒப்பந்தம் என்பது தமிழீழ மக்களது அரசியல் உரிமை போராட்டத்தின் அடிப்படை நோக்கத்தை உள்ளடக்கியதாகக் காணப்படவில்லை. ஆனால், இந்திய பிரதமரின் நெருக்குதல் காரணமாகவும், சில வாக்குறுதிகள் காரணமாகவும் தமிழீழமக்கள் இந்த ஒப்பந்தத்தை ஏற்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

இரண்டாவதாக, இந்த ஒப்பந்தம் கொழும்பில் கைச்சாத்திடுவதற்கு தயாரானவேளையில், கொழும்பு உட்பட தெற்கு முழுவதும் எரிந்து கொண்டிருந்தது.

மூன்றாவதாக, சிங்கள பௌத்தவாதிகளும் தெற்கின் அரசியல் கட்சிகள் யாவும் இந்த ஒப்பந்தத்தை ஏற்க மறுத்தனர்.

நான்காவதாக, கொழும்பில் இந்த ஒப்பந்தத்தை கைச்சாத்திட்ட தினமான 1987 ஜுலை மாதம் 30ஆம் திகதி, இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியின் அணிவகுப்புமரியாதை பார்வையிட்டுச்சென்ற வேளையில், சிங்களக் கடற்படைச் சிப்பாய் ஒருவர் தனது துப்பாக்கியினால் இந்தியப் பிரதமரை கொலைசெய்வதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்தார்.

இச்சம்பவத்தை மிகவும் விரைவாக காந்தி குடும்பமும் இந்திய மக்களும் மறந்து செயற்படுவது மிகவும் வியப்பிற்குரிய விடயம். இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியைக் கொலை செய்ய முயற்சித்த கடற்படைச் சிப்பாயை, அப்போதைய பிரதமர் ரணசிங்க பிரேமதாசா உட்பட பெரும்பான்மையான சிங்கள பௌத்த மக்கள் 'கதாநாயகனாக' வாழ்த்தியிருந்தனர்.

இச்சிப்பாய்க்கு 6 வருடகால சிறை தண்டனை தீர்ப்பிடப்பட்டது. ஆனால் அப்போதைய பிரதமர் ரணசிங்க பிரேமதாசா 1989ஆம் ஆண்டு ஸ்ரீலங்காவின் ஜனதிபதியாகக் கடமையேற்றவுடன், இச்சிப்பாய்க்கு ஜனாதிபதி மன்னிப்பு கொடுத்து, இரண்டரை வருட சிறைதண்டனையை மட்டுமே சிப்பாய் அனுபவித்திருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இன்றும் இச்சிப்பாய், சிங்கள பௌத்த மக்களிடையே ஓர் 'கதாநாயகனாக' விளங்குகிறார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஐந்தாவதாக, சமாதான படை எனக் கூறி வடக்கு மற்றும் கிழக்கில் நிலைக் கொண்டிருந்த, இந்தியா படைக்கும் தமிழீழ விடுதலைபுலிகளிற்கும் இடையில் யுத்தம் ஆரம்பமாகியது.

இதனால் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மட்டுமல்லாது, ஆயிரக்கணக்கான அப்பாவி தமிழ் மக்கள் உட்பட நானும் கொலை, கொள்ளை, கைது, சித்திரவதை, பாலியல்வன்முறை என மிகவும் கொடூரமான முறையில் பாதிக்கப்பட்டோம். இவை யாவும், இலங்கை – இந்தியா ஒப்பந்தத்திற்கு வடக்கு மற்றும் கிழக்கு வாழ்மக்கள் கொடுத்த விலையாகும்.

தமிழீழ மக்களின் இவ்வளவு அர்ப்பணிப்புகளின் பின்பும், பல தசாப்தங்களாகியும் இன்றும் இந்த இந்திய – இலங்கை ஒப்பந்தம் நடைமுறைபடுத்தப்படாமை மிகவும் வெட்க கேடான விடயம்.

நாளுக்கு நாள், நாளாந்தம் இந்த ஒப்பந்தத்தின் சாரங்கள் வலுவிழந்து போகின்றன என்பதை இந்தியா

> 'தவறு செய்வது தவறு இல்லை, ஆனால் தொடர்ந்து தவறிற்கு மேல் தவறு செய்வது மிக தவறு'

உணருமா? பௌத்த சிங்களவாதிகள், ஆட்சியில் இருக்கும் இந்திய அரசைத் தொடர்ந்து ஏமாற்றி வருகிறார்கள் என்பதை இன்னும் இந்தியா உணரவில்லையா? டெல்லியில் உள்ள முடிவெடுப்பாளர்களின் அணுகுமுறையில் மாற்றம் வரும் வரை, அதிஉயர் விலையை கொடுத்துள்ள இலங்கை – இந்திய ஒப்பந்தம் என்பது, ஸ்ரீலங்காவின் ஆட்சியாளர்களது குப்பை தொட்டியில் தான் காணப்படும்.

### ஈழத்தமிழர் கொடுத்த விலை

அப்படியானால், இந்த இந்திய – இலங்கை ஒப்பந்தந்தத்திற்காக ஈழத்தமிழர்கள் கொடுத்த மாபெரும் விலையும், அத்துடன் இந்தியா பிரதமரினால் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளும் என்னவாயிற்று?

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் கொலைகுற்றச்சாட்டுக் காரணமாக, தமிழீழ விடுதலைபுலிகள் மீது காந்தி குடும்பத்தினர் மிகவும் ஆத்திரம் கொண்டு, தமிழீழ விடுதலை புலிகளை அழிக்க வேண்டும் என்பதில் மிகவும் கண்ணும் கருத்துமாக இருந்துள்ளனர்.



இதன் காரணமாக, தமிழீழ விடுதலைபுலிகளிற்கு எதிராக, 2008ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரை நடைபெற்ற போரில், இந்திய இராணுவத்தின் சிறந்த பிரிவினர், ஸ்ரீலங்கா இராணுவத்துடன் இணைந்து போரிட்டு விடுதலைபுலிகளை அழித்தனர் என்பதே உண்மை.

(தொடரும்)

# முசலிப் பிரதேச செயலாளரை உடனே மாற்றக்கோரி மன்னாரில் போராட்டம்



மன்னார் முசலிப் பிரதேச செயலாளரை உடன்மாற்றக்கோரி முசலிப்பிரதேச மக்கள் சார்பாகச் சிலர் மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் இறங்கியமையுடன் மன்னார்மாவட்ட அரசஅதிபரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

நேற்றுச் செவ்வாய் கிழமை காலை 10 மணி தொடக்கம் மன்னார்மாவட்ட செயலகத்துக்கு முன்பாக ஒன்று திரண்ட முசலி பிரதேசத்தைச் சார்ந்த முஸ்லிம் மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தின்போதுமக்கள்தங்கள்கைகளில் முசலிப் பிரதேச செயலாளருக்கு எதிரானவாசகங்களைக்கொண்ட பதாதைகளை ஏந்திக் கொண்டு கோஷங்களை எழுப்பினர்.

இதைத் தொடர்ந்து மன்னார் மாவட்ட அரச அதிபரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

# டிப்பரில் மண் பறித்த நபர் மின்சாரம் தாக்கி மரணம்

வவுனியா, ஒக். 17

வவுனியாவில் நேற்று அதிகாலை டிப்பர் வாகனச் சாரதி ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா மணிப்புரம் பகுதிக்குத்தனதுடிப்பர்வாகனத்தில் மண் ஏற்றிச் சென்றுள்ளார் செட்டிகுளம் வீரபுரம் பகுதியைச் சேர்ந்த அன்ரன் ஜெகதீஸ்வரன் ரமேஷ் (வயது-43).

அதிகாலை 3 மணியளவில் வாகனத்திலுள்ள மண்ணை வீட்டுக்குள் பறித்துவிட்டு உயர்த்திய பெட்டியுடன் டிப்பரை வீட்டுக்கு வெளியே செலுத்தியுள்ளார். இதன்போது வீதியிலிருந்த மின்கம்பத்தில் பெட்டி முட்டியபோது மின்சாரம் டிப்பர் வாகனத்தில் பாய்ந்து சாரதியைத் தாக்கியுள்ளது.

இதன்போது சம்பவ இடத்திலேயே வாகனச் சாரதி உயிரிழந்துள்ளார். இதையடுத்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுச்சம்பவ இடத்திற்குச்சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டமையுடன் சடலத்தை வவுனியா பொது வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். (ஜ-100)

# இலங்கைத் தேயிலையின் தரம் தொடர்பில் பிரசாரம்

கொழும்பு, ஒக். 17

இலங்கைத் தேயிலையின் தரம் குறித்து 12 நாடுகளில் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தேயிலைச் சபையின் தலைவர் லூசில் விஜயவர்தன இதனைத் தெரிவித்தார்.

இதற்கமைய அடுத்த மாதம் ஆரம்பமாகும்பிரசாரநடவடிக்கைகள் ரஷ்யாவிலும் அதனைத் தொடர்ந்து சீனாவிலும் நடைபெறவுள்ளன என அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், இந்தத் திட்டத்திற்காக 350 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் தேயிலை ஏற்றுமதியை அதிகரிக்க முடியும் என்றும் நம்பப்படுகின்றது. (ஐ)

# நாவற்குழி மகா வித்தியாலயத்தில் புதிய ஆய்வுகூடம் நேற்றுத் திறப்பு



யாழ்ப்பாணம், ஒக். 17

நாவற்குழி மகா வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட மாணவர்களுக்கான ஆய்வுகூடம் நேற்றுக் காலை திறந்து வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கேசவன்சயந்தனின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் 2017 ஆம் ஆண்டுக்கான கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி விசேட நிதி ஒதுக்கீட்டில் இந்த ஆய்வுக்கூடம்அமைக்கப்பட்டது.

இந்த ஆய்வுகூடத் திறப்பு விழா நிகழ்வு நேற்றுக் காலை பாடசாலைஅதிபர்தலைமையில் நடைபெற்றபோது கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் விருந்தினராகக் கலந்து கொண்டு ஆய்வு கூடத்தைத் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில்மாகாணசபை உறுப்பினர்சயந்தன், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)

# தாய்மார் கழகத்துக்கான அரைக்கும் ஆலை திறப்பு



வவுனியா, ஒக். 17

வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் மருத்துவர் பத்மநாதன் சத்தியலிங்கத்தால் வவுனியா தவசிக்குளத்தில் தாமாய்மார் கழகத்திற்கான தானியங்கள்அரைக்கும்ஆலை நேற்று முன்தினம்திறந்துவைக்கப்பட்டது.

மாகாணசபை உறுப்பினர் சத்தியலிங்கத்தால் மத்திய சுகாதார அமைச்சிடமிருந்து பெற்றுக் கொடுக்கப்பட்ட நிதியில்ரூபாபத்துலட்சம்செலவில் இது அமைக்கப்பட்டுள்ளது.

குடும்பப் போசாக்கை மேம்படுத்தும் முகமாக ஆறு தானியங்கள் அடங்கிய போசாக்கு உணவு தயாரிக்கும் நோக்கிலேயே இந்த அரைக்கும் ஆலை அமைக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தின் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் 64 தாய்மார்கழகங்கள் உருவாக்கப்பட்டு இயங்கிவரும் நிலையில் இதுவரை இதுபோன்று எட்டு அரைக்கும் ஆலைகள் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நிகழ்வில்; வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர்லவன்செல்வராட்ணம், பிரதேசத்திற்கு பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகர், குடும்பநல உத்தியோகத்தர், தாய்மார் கழக அங்கத்தவர்கள் கலந்துகொண்டனர். (ஐ)

# விமானப்படை வாகனம் விபத்து; ஒருவர் உயிரிழப்பு; ஐவர் காயம்

கொழும்பு, ஒக். 17

புத்தளம் சாலியவெவ பிரதேசத்தின் 18ஆம் கட்டைப் பகுதியில் நேற்று முன் தினம் திங்கட் கிழமை மாலை விமானப்படை அதிகாரி உள்ளிட்டவர்கள் பயணித்த டிபெண்டர் வாகனம் ஒன்று விபத்திற்குள்ளானதில் அதன் சாரதி உயிரிழந்தனர். மேலும் ஐவர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

அநுராதபுரம்- கும்புக்கந்வெவ பிரதேசத்தைச் சேர்ந்த விமானப் படை சாரதி ஏ. சி. ருவன் பிரதீப் ரணசிங்க (வயது 28) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

விமானப் படையினர் கட்டுநாயக்கா விமானப் படை முகாமிலிருந்து அநுராதபுரம் விமானப்படைமுகாமைநோக்கிச் சென்று கொண்டிருந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இவர்கள் பயணித்த டிபென்டர் வாகனம் அதிக வேகத்தில் பயணித்து சாலியவெவ 18ஆம் கட்டைப் பிரதேசத்தில் திடீரென வீதியில் புரண்டு விபத்திற்குள்ளாகிச் சுமார் 100 மீற்றர் தூரம்வரை இழுபட்டுச்சென்றதாக ஆரம்பக் கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

# மன்னார் செயலகத்தில் வாணிவிழா



மன்னார் மாவட்ட செயலக இந்து அலுவலர்கள் மன்றத்தின் ஏற்பாட்டில் நேற்றுச் செவ்வாய்க் கிழமை காலை மாவட்ட செயலக மண்டபத்தில் மன்னார் மாவட்ட அரச அதிபர் சி.ஏ.மோகன்ராஸ் தலைமையில் வாணிவிழா நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் குணபாலன், திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (ஐ-112)




# இளையோர் ஒலிம்பிக் வரலாற்றில் இலங்கைக்கு முதல் பதக்கம்!

ஆர்ஜென்ரீனாவில் இடம்பெற்று வரும் இளையோர் ஒலிம்பிக் போட்டியில் இலங்கை வீராங்கனையான பரமி வசந்தி மாரிஸ்டெல்லா வெண்கலப் பதக்கத்தை சுவீகரித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற 2 ஆயிரம்மீட்டர்தடைதாண்டல் பந்தயத்தில் அவர் இந்தப் பதக்கத்தை வென்றுள்ளார்.

இளையோர் ஒலிம்பிக் போட்டி ஒன்றில் இலங்கை வீராங்கனை ஒருவர் பதக்கம் வெல்லும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

இந்தநிலையில் வெண்கலப்பதக்கம் வென்றுள்ள பரமி வசந்தி மாரிஸ்டெல்லாவிற்கு பலரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

# 6 பந்துகளில் 6 சிக்சர்கள் விளாசிய ஆப்கன் வீரர்

ஆப்கானிஸ்தான் பிரீமியர் லீக் 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் ஹஸ்ரத்துல்லா சசாய் என்ற வீரர் 6 பந்தில் 6 சிக்சர் அடித்துச் சாதனை படைத்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் பிரீமியர் லீக் 20 ஓவர் கிரிக்கெட் போட்டி ஐக்கிய அரபு எமிரேட்சில் நடைபெற்று வருகிறது.

சார்ஜாவில் நடைபெற்ற போட்டி ஒன்றில் ஆப்கானிஸ்தான் வீரர் ஹஸ்ரத்துல்லா சசாய் 6 பந்தில் 6 சிக்சர் அடித்துச் சாதனை நிகழ்த்தினார். காபுல் ஸ்வானை அணி வீரரான அவர் பல்கி லெஜன்ட் அணிக்கு எதிரான போட்டியில் இந்த அதிரடியை வெளிப்படுத்தினார்.

போட்டியின் 4ஆவது ஓவரை அப்துல்லா மஜாரி வீசினார். இந்த ஓவரில் தான் ஹஸ்ரசத்துல்லா 6 பந்துகளிலும் 6 சிக்சர் விளாசினார். அவர் 17 பந்தில் 62 ஓட்டங்கள் எடுத்தார். 12 பந்துகளில் அரை சதம் கடந்தார்.

ஒரே ஓவரில் 6 சிக்சர்கள் அடித்த 6ஆவது வீரர் என்ற பெருமையை ஹஸ்ரத்துல்லா பெற்றார். இதற்கு முன்பு கேரி சோபர்ஸ் (மேற்கிந்தியத் தீவுகள்), ரவிசாஸ்திரி (இந்தியா), கிப்ஸ் (தென்ஆப்பிரிக்கா), யுவராஜ்சிங் (இந்தியா), ஜோர்டன் கிளார்க் (இங்கிலாந்து) ஆகியோர் 6 பந்துகளில் 6 சிக்சர்கள் அடித்து இருந்தனர்.





# சனத் ஜெயசூரிய மீது ஐ.சி.சி. குற்றச்சாட்டு

## பதிலளிக்க 14 நாள்கள் அவகாசம்

இலங்கை அணியின் முன்னாள் தேர்வுக் குழுத் தலைவரான சனத் ஜெயசூரிய, ஐ.சி.சி. விதிமுறைகளை மீறியுள்ளார் எனக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதையடுத்து ஐ.சி.சியின் ஊழல் தடுப்புவிதிமுறைகளைமீறியகுற்றத்துக்காக ஜெயசூரியவுக்கு அறிவித்தல் அனுப்பியுள்ளது ஐசிசி. குற்றச்சாட்டுகளுக்கு 14 நாள்களில்பதில்அளிக்கும்படி ஜெயசூரியவுக்குக் கட்டளை யிடப்பட்டுள்ளது.

இலங்கைக் கிரிக்கெட்டில் உள்ள ஊழல்கள் குறித்து ஐ.சி.சி. ஊழல் தடுப்புப் பிரிவு விசாரணை செய்து வருகிறது. ஐ.சி.சி. ஊழல் தடுப்புப் பிரிவுக்கு ஒத்துழைப்பு அளிக்காதமை, சரியான தகவல்கள் அளிக்காதது மற்றும் ஐ.சி.சி. விசாரணையைத் தாமதப்படுத்தும் நோக்கில் ஆதாரங்களை அழிக்க முற்படுகின்றமை போன்ற குற்றச்சாட்டுகள் ஜெயசூரிய மீது சுமத்தப்பட்டுள்ளன.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விரைவில் பதில் அளிக்க அவருக்கு ஐ.சி.சி. கட்டளையிட்டுள்ளது.

# இலங்கைத் தொடரிலிருந்து லியாம் டாவ்சன் நீக்கம்!




இலங்கை அணிக்கெதிரான ஒருநாள் தொடரிலிருந்து இங்கிலாந்தின் சுழற்பந்துவீச்சாளர் லியாம் டாவ்சன் நீக்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து – இலங்கை அணிகளுக்கு இடையிலான மூன்றாவதுஒருநாள் போட்டி இன்று புதன்கிழமை கண்டி பல்லேகல மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான பயிற்சிகளில் இங்கிலாந்து அணி நேற்று ஈடுபட்ட போதும், லியாம் டாவ்சன் அதில் கலந்துகொள்ளவில்லை.

உபாதைகாரணமாகஅவர்பயிற்சிகளை தவிர்த்துள்ளார்எனத்தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில்அவர் இந்ததொடரின் எஞ்சியுள்ள போட்டிகள் எதிலும் கலந்து கொள்ள மாட்டார் என அறிவிக்கப் பட்டுள்ளது.

அவருக்குப் பதிலாக இங்கிலாந்தின் டெஸ்ட் குழாமில் இணைக்கப்பட்டிருந்த ஜோ டென்லி ஒருநாள் அணிக்கு உள்வாங்கப்பட்டுள்ளார்என இங்கிலாந்து கிரிக்கட் சபை உத்தியோகப்பூர்வமாக அறிவித்துள்ளது.

# மேற்கிந்தியத் தீவுகள் அணியின் பயிற்சியாளர் மீது நடவடிக்கை

ஐதராபாத், ஒக்.17

நடுவரை நோக்கிதகாத வார்த்தைகள் கூறியமையால் மேற்கிந்தியத் தீவுகள் தலைமை பயிற்சியாளருக்கு இரண்டு போட்டிகளில் பங்கேற்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தியா – மேற்கிந்தியத் தீவுகள் இடையிலான 2ஆவது டெஸ்ட் ஐதராபாத்தில் நடைபெற்றது. மேற்கிந்தியத் தீவுகள் 2 ஆவது இன்னிங்ஸில் துடுபெடுத்தாடும்போது தொடக்க வீரர் பொவேல்அஸ்வின்பந்தில்ரகானேவிடம் கேட்ச்கொடுத்து ஆட்டமிழந்தார். பந்தை தரையில் உரசியது மாதிரித் தெரிந்தது. ஆனால் டிவி நடுவர் விக்கெட் கொடுத்துவிட்டார். இதனால் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைமை பயிற்சியாளர் ஸ்டூவர்ட் லா கடும் கோபம் அடைந்தார்.

அத்துடன்டிவிஅம்பயரின்அறைக்குச் சென்று முறையற்ற வார்த்தைகளை கூறி வாக்குவாதம் செய்தார். அத்துடன் நிற்காமல் 4–வது நடுவரிடமும் சென்று வாக்குவாதத்தில் ஈடுபட்டார். இதனால் ஸ்டூவர்ட் லா மீது கள நடுவர்கள் ப்ரூஸ் ஆக்சன்போர்டு, இயன் குட், 3ஆவது நடுவர் நிகெல் லாங், 4ஆவது நடுவர் நித்தின் மேனன் ஆகியோர் நடவடிக்கை மேற்கொண்டனர்.

அப்போது ஸ்டூவர்ட் லா ஐசியின் விதிமுறையை மீறியதாக, அவருக்கு 100 சதவீதம் அபராதத்துடன் தடைக்கான மூன்று புள்ளிகளுடன் வழங்கப்பட்டது.

ஏற்கனவே 2017ஆம் ஆண்டு மே மாதம் பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்டின்போது 25 சதவீதத்துடன், தடைக்கான ஒரு புள்ளியையும் பெற்றிருந்தார். தற்போது இந்த புள்ளிகள் இரண்டுஒருநாள்போட்டிகளில்பங்கேற்க முடியாத அளவிற்கு உள்ளதால் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் ஸ்டூவர்ட் லா இந்தியாவிற்கு எதிராக 21 மற்றும் 24 ஆம் நடைபெறும் ஒருநாள் போட்டியில் பங்கேற்க இயலாது.

## டிசெ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முப்படையினர் மற்றும் பொலிஸார் வசம் உள்ள காணிகள் விடுவிப்பு மற்றும் மீள்குடியேற அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் மீள்குடியேற்றத்தைத் துரிதப்படுத்தல் ஆகியன தொடர்பில் ஆராய்வதற்கான உயர்மட்டக் கூட்டம் யாழ். மாவட்ட அரச அதிபர் எ.ஆ.வேதநாயகன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதன் பின்னர் இது குறித்து ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே சுமந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

நேற்று நடந்த இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட அரசஅதிபர், பிரதேச செயலாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன், எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறிதரன், விஜயகலா மகேஸ்வரன் ஆகியோரும், இராணுவம், விமானப்படை, கடற்படை உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

நேற்று பிற்பகல் மூன்று மணி முதல் மாலை ஆறு மணிவரை இந்தக் கலந்துரையாடல் நடந்தது.

இது குறித்து சுமந்திரன் மேலும் தெரிவிக்கையில் –

யாழ்.மாவட்டத்தில் தனியார் காணி, அரச காணிகளில் விடுவிக்கப்பட்டவை எவை, இன்னமும் விடுவிக்கப்படவுள்ள காணிகள் எவை என்று நேற்றுக் கலந்துரையாடல் நடந்தது.

ஒவ்வொரு பிரதேச அலுவலர் பிரிவிலும் இராணுவம், கடற்படை, பொலிஸாரிடம் இருக்கும் நிலங்களை வகையாகப் பிரித்து நாங்கள் பார்த்தோம்.

அதில் கடந்த தடவை இருந்த தரவுகளோடு ஒப்பிட்டுப் பார்த்த போது இராணுவத்தினராலேயே பல காணிகள் ஏற்கனவே விடுவிக்கப்பட்டிருப்பதைக் கண்டிருக்கிறோம். கடற்படையினர் இது வரை விடுவித்தது மிக மிக சொற்ப அளவிலான இடங்களைத்தான்.

ஆகவே கடற்படைத் தளபதியிடம் இன்று (நேற்று) எடுக்கப்பட்ட தரவுகள் எல்லாவற்றையும் கொடுத்து மிக விரைவாக அந்தக் காணிகளை விடுவிக்கும் கால அட்டவணையைத் தெளிவாக எங்களுக்குக் கொடுக்குமாறு கேட்டிருக்கிறோம்.

இங்கு இராணுவத்தினர் ஏராளமான காணிகளை விடுவித்திருந்தாலும் இன்னமும் விடுவிக்கப்படுவதற்குப் பல ஏக்கர் காணிகள் இருக்கின்றன. அதில் பல காணிகளைத் தாங்கள் விடுவிப்பதற்கு முடிவெடுத்துவிட்டார்கள் என அவர்கள் சொன்னார்கள்.

ஆனால் அதனை விடுவிப்பதில் இரண்டு விடயங்களைச் சுட்டிக்காட்டினார்கள். அதாவது அங்கு உள்ள இராணுவத்தினரை இன்னொரு இடத்திற்கு மாற்றுவதற்கு மாற்றீடான காணிகள் எங்கே என்பதனைக் கண்டுபிடிப்பதும், தங்களுடைய அந்த இடமாற்றத்திற்குத் தேவையான பணத்தையும் புதிய கட்டடங்களுக்குத் தேவையான பணத்தையும் அரசு கொடுக்க வேண்டும் எனக் கூறினார்கள்.

ஆகவே இந்த இரண்டும் சரிவந்தால் தாங்கள் கூடுதலான பிரதேசங்களில் இருந்து வெளியேறுவதற்கு ஏற்கனவே தீர்மானித்துவிட்டதாக இராணுவத்தினர் கூறினார்கள்.

பொலிஸாரோடு பேசியபோது, பல இடங்களில் புதிய பொலிஸ் நிலையங்களை அமைக்க வேண்டிய தேவை இருக்கின்றது. அதில் உதாரணத்திற்கு அனலைதீவுப் பிரதேசத்தை எடுத்துக் கொண்டால் அங்கே பொலிஸ் நிலையம் இல்லை.

இதனால் பிடிவிறாந்தோடு உள்ள பலர் அனலைதீவுப் பிரதேசத்தில் ஒளித்திருக்கின்றார்கள் என்ற தகவலும் கிடைத்துள்ளது. ஏனென்றால் அங்கே பொலிஸ் நிலையம் இல்லை. ஆகவே இராணுவம், கடற்படை அந்தப் பிரதேசங்களில் இருந்து வெளியேறுகின்றபோது அங்கு சிவில் நிர்வாகம் ஏற்படவேண்டுமாக இருந்தால் பொலிஸார் தேவை.

பொலிஸ் நிலையங்கள் அமைப்பதில் அங்கேயும் இரண்டு பிரச்சினைகள் உள்ளன. முதலாவது அந்தக் காணிகளை வாங்குவது அல்லது சுவீகரிப்பது. அதற்கான பணம் தேவை. இதில் காணி எடுத்துக் கொடுக்கப்பட்ட பிறகும் கூட பொலிஸ் நிலையங்களைக் கட்டுவதற்குப் பணம் விடுவிக்கப்படவேண்டி இருக்கின்றது.

யாழ். பிரதேசத்தில் சில பொலிஸ் நிலையங்கள் 2020, 2022 ஆம் ஆண்டுகளிலேயே கட்டுவதற்காக கால அட்டவணை போடப்பட்டுள்ளது.

ஆகவே இதில் மிக முக்கியமாக அரசு பணம் விடுவிக்கப்படாமல் இருப்பது காணி விடுவிப்புக்கு ஒரு தடையாக இருக்கிறதென்ற கருத்துச் சொல்லப்பட்டிருக்கின்றது. இது சம்பந்தமாக நாங்கள் அரசுடன் பேச வேண்டியுள்ளது.

மீள்குடியேற்றத்திற்கு, மீள் கட்டுமானத்துக்குப் பணம் போதாது. எங்கள் மக்கள் திரும்பச் சென்றுகுடியேறவேண்டும் என்ற தேவை உள்ளதால் அதற்கு அரசு ஒதுக்கீடுகளை அதிகரிக்க வேண்டும் – என்றார். (ஐ-07)

## வரவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும், அவர்களுக்கு நியாயம் கிடைக்கவேண்டும் என்றும் அமைச்சர் இதன்போது வலியுறுத்தினார். (ஐ)

## பரபரப்பை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த யுவதி கடத்தி செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் ஓட்டோவின் சாரதியே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனவும், இவர் நீர்வேலிப் பகுதியைச் சேர்ந்தவர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது சந்தேகநபரான ஓட்டோச் சாரதி, கைதடியில் உள்ள கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றுக்குத் தனது மனைவியை அழைத்து சென்றார் என்றும், தனது மனைவி மனநலம் பாதிக்கப்பட்ட ஒருவர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஆலயத்திற்குச் சென்று திரும்பிக்கொண்டிருந்தபோது மனைவி இடைநடுவில் குழப்பம் ஏற்படுத்தினார் எனவும், இதனால் அவரின் கைகளைக் கட்டி அழைத்துச் சென்றார் எனவும், தனது பிள்ளைகளின் ஆடைகளையே ஓட்டோவில் இருந்து தூக்கி எறிந்தார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தெல்லிப்பளை வைத்தியசாலைக்கே தனது மனைவியை அழைத்து சென்றதாகவும் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் தனது வாக்குமூலத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, செம்மணி வீதி வழியாக ஆடியபாதம் வீதி வரை இந்த ஓட்டோ சென்றுள்ளது. இதன்போது பலரும் அந்த ஓட்டோவை நிறுத்துவதற்கு முயற்சித்தனர்.

எனினும், ஓட்டோ எந்த இடத்திலும் நிறுத்தப்படவில்லை. அதேசமயம் திருநெல்வேலியில் அமைந்துள்ள வீதி சமிஞ்ஞையிலும் அந்த ஓட்டோ நிறுத்தப்படவில்லை.

முன்னதாக யாழ்ப்பாணம் – செம்மணிப் பகுதியில் யுவதி ஒருவரை நேற்று மதியம் அடையாளம் தெரியாத சிலர் கடத்திச் சென்றனர் எனச் செய்திகள் வெளியானதால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-07)

## வடக்கு இளைஞ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டார் விமான சேவைகள் நிறுவனத்திற்குச் சொந்தமான விமானத்தின் ஊடாக இவர்கள் போலிக் கடவுச்சீட்டுகளைப் பயன்படுத்தி வெளிநாடு செல்ல முயற்சித்த நிலையில் நேற்று அதிகாலை விமான நிலைய குற்றப் புலனாய்வுப் பொலிஸாரினால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.பருத்தித்துறையைச் சேர்ந்த பொன்னுத்துரை துவாரகன் (வயது37) , அரியரத்னம் விஜய் (வயது–22) மற்றும் மன்னார் பேசாலையைச் சேர்ந்த மதியதேவாஸ் நிரோஜன் (வயது–28) ஆகிய தமிழர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு உதவிய குற்றச்சாட்டில் வத்தளையைச் சேர்ந்த இருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

## அரசியல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாகக் கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள அவர்,

ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தியபோது, அரசியல் கைதிகள் விவகாரத்துக்கு இன்று புதன்கிழமை ஒரு தீர்வை வழங்குவார் என உறுதியளித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியைச் சந்தித்த போது, இந்த விவகாரம் குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

இந்த விவகாரம் தொடர்பாக நீதியமைச்சர் தலதா அத்துக்கோரளவுடன் கலந்துரையாடுவதாகவும், அதன் பின்னர் இன்று ஒரு தீர்வை வழங்குவதாகவும் ஜனாதிபதி கூறினார்.

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கவேண்டும் என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்துடன் ஜனாதிபதிக்கு உடன்பாடு உள்ளது.

தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பான தமது கொள்கையை இலங்கை அரசு ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் கூறியுள்ளது.

அந்த வாக்குறுதிகளை விட, ஜனாதிபதி குறிப்பிட்ட நாளில் தீர்வை வழங்குவதாகக் கூறியுள்ளார். எனவே, சாதகமான முடிவுகளை நாங்கள் எதிர்பார்க்க முடியும். என்றார். (ஐ)

## சுருதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது மாறியுள்ளது.

– இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவருமான சுரேஷ் பிறேமச்சந்திரன்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்றுத் தாம் நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஆயுதப் போராட்டம் இடம்பெற்றிருக்கக்கூடாது என நாடாளுமன்றத்தில் பேசியுள்ளார். ஆனால் முன்னர் விடுதலைப் புலிகளின் போராட்டத்தை ஆதரித்து பேசிய அவரின் சுருதி இப்போது மாறியுள்ளது.

தற்போது அரசுடன் பேசுவதாக இருந்தாலும் சரி, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் பேசுவதாக இருந்தாலும் சரி, சர்வதேசத்துடன் பேசுவதாக இருந்தாலும் சரி, விடுதலைப் போரட்டத்தின் மீதும் தமிழ் மக்கள் மீதும் ஏறி நின்றே பேச முடியும். பல்லாயிரம் இளைஞர்கள் இந்தப் போரட்டதுக்காகத் தமது உயிரைத் தியாகம் செய்துள்ளார்கள். ஆகவே போராட்டத்தைக் கொச்சைப்படுத்த இவருக்கு எந்தவிதமான உரிமையும் கிடையாது.

இரா.சம்பந்தன் போராட்டம் ஒன்றில் கைது செய்யப்பட்டு பனாங்கொடை முகாமில் தடுத்து வைக்கப்பட்டபோது, இனிமேல் இப்படியான போரட்டங்களில் ஈடுபடமாட்டேன் என முதலாவதாகக் கடிதம் எழுதிக் கொடுத்து விட்டு வந்தவர். ஆகவே இவர்களுக்கு அஹிம்சைப் போராட்ட வரலாறும் இல்லை. ஆயுதப் போராட்டத்துக்கு அண்மையிலும் இவர்கள் வரவில்லை. இந்நிலையில் இப்போராட்டங்களைக் கொச்சைப்படுத்த இவர்களுக்கு உரிமை இல்லை. – என்றார். (ஐ-07)

## ஆட்சி மாற்றத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய அரசை உருவாக்க முயற்சிக்கிறார்கள் எனச் சட்டம், ஒழுங்கு பிரதி அமைச்சர் நளின் பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர பதவி விலகுவது தொடர்பில், எந்தவொரு அறிவித்தலும் இதுவரை, எனக்கோ எமது அமைச்சுக்கோ கிடைக்கப் பெறவில்லை.

பொலிஸ்மா அதிபர் பதவி விலகிய பின்னர் அவரை வெளிநாடொன்றின் தூதுவராக நியமிக்க அரசு முனைவதாக தெரிவிக்கப்படும் கருத்தில் எவ்வித உண்மையும் இல்லை.

இலங்கை அரசியல் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி நன்கு அறிந்துள்ளது. ஒருபோதும் குறுகிய பார்வையில் எந்த முடிவுகளையும் நாம் எடுப்பதில்லை. – என்றார். (ஐ)

## வடக்கு முதல்வர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களுக்கு அறிவிக்கவுள்ளார் எனத் தமிழ் மக்கள் பேரவை தெரிவித்துள்ளது.

இது குறித்து தமிழ் மக்கள் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

தமிழ் மக்களின் தற்போதைய பிரதிநிதித்துவ அரசியலானது மக்கள் பங்களிப்புடன் கூடிய ஓர் அரசியல் பயணமாக மாற்றமடைய வேண்டிய காலகட்டத்திலுள்ளது.

இந்த மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கிலும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை அடைந்துகொள்வதற்கான வழித்தடம் எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பிலும், இதில் தமிழ் மக்கள் பேரவையின் வகிபாகம் தொடர்பிலும் சில தீர்மானங்களை மேற்கொள்ளும் மாபெரும் மக்கள் ஒன்றுகூடல் 24ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் – நல்லூர் ஆலய வடக்கு வீதியில் அமைந்துள்ள நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் வடமாகாண முதலமைச்சரும் தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவருமான நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் விசேட உரையாற்றவுள்ளமையுடன், தனது எதிர்கால அரசியல் நிலைப்பாடு தொடர்பிலும் தமிழ் மக்களுக்கு அறிவிக்கவுள்ளார்.

இந்த ஒன்றுகூடலில் அரசியல் வேறுபாடுகளைக் கடந்து பொதுமக்கள், பொது அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள், கல்விச் சமூகத்தினர் மற்றும் இளைஞர், யுவதிகள், போன்ற அனைத்துத்தரப்பினரும் கலந்து பங்களிக்கவேண்டும். – என்றுள்ளது. (ஐ)

## கிணற்றுக்குள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த கிணற்றில் இருந்து நீர்த்தாங்கிகள் மூலம் மக்களுக்கு நீர் விநியோகம் செய்வதற்காவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது கிணற்றுக்குள் அபாயகரமான வெடிபொருள்கள் புதைந்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சுத்தம் செய்யும் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்புப் பொலிஸாருக்கு பிரதேச சபை அதிகாரி ஒருவர் தகவல் வழங்கியதையடுத்து, ஆபத்தான வெடிபொருள்களை அங்கிருந்து பாதுகாப்பாக அகற்றுவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## தமிழ்க்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருமான சுரேஷ் பிறேமச்சந்திரன். அரசியல் கைதிகள் விடயத்தில் அரசியல் தீர்மானமொன்றே தற்போது எடுக்கவேண்டுமெனவும் அவர் கோரியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அரசியல் தீர்மானம் கொண்டுவரப்பட வேண்டும். இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? ஜனாதிபதி மற்றும் பிரதமர் அத்தகைய நிலைக்கு வந்துள்ளார்களா என்பது அடுத்த கேள்வியாகும்.

இந்நிலையில் இவர்கள் இதனைச் சட்ட பிரச்சினையாகப் பார்க்கின்றார்களே தவிர அரசியல் பிரச்சினையாகப் பார்க்கவில்லை.

கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரின் கருத்துப்படி பார்க்கும் போது இவர்களும் தமிழ் அரசியல் கைதிகளின் விடயத்தைச் சட்டப் பிரச்சினையாகவே பார்க்கின் றார்கள். அவ்வாறாயின் கூட்டமைப்பினர் அவர்களை அரசியல் கைதிகளாகப் பார்க்காது பயங்கரவாதிகளாகவே பார்க்கின்றார்கள். அவர்களை விடுதலை செய்வதற்கு அரசியல் தீர்மானத்தையே எடுக்க வேண்டும். – என்றார். (ஐ-07)

## விக்கி மீதான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் இரு அமைச்சர்கள் சார்பில் கிளப்பப்பட்டுள்ள பூர்வாங்க ஆட்சேபனை தொடர்பில் தனது தீர்ப்பை மேன்முறையீட்டு நீதிமன்றம் எதிர்வரும் டிசெம்பர் 10ஆம் திகதி வழங்கும்.

இந்த வழக்கு நேற்று நீதியரசர்கள் குமுதினி விக்கிரமசிங்க, ஜனக் டி சில்வா ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே தீர்ப்புக்கான திகதி நிர்ணயிக்கப்பட்டது.

மேற்படி நீதிமன்ற அவமதிப்பு விடயத்தை விசாரணை செய்வதற்கான உரித்து இந்த நீதிமன்றத்துக்கு இல்லை என எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்ட வாதங்களையும் அதற்கு எதிராக மனுதாரர் தரப்பு முன்வைத்த வாதங்களையும் நேற்று நீதியரசர்கள் செவிமடுத்தனர்.

இந்தவிடயத்தில் இருதரப்பினரும் தங்களது மேலதிக எழுத்து மூலமான சமர்ப்பணத்தை அடுத்த 7ஆம் திகதிக்கு முன்னரும், அதற்கான பதில் விளக்கங்கள் இருப்பின் அவற்றை அடுத்தமாதம் 26ஆம் திகதிக்கு முன்னரும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என உத்தரவிட்ட நீதியரசர்கள் பூர்வாங்க ஆட்சேபனை மீதான தீர்ப்பு டிசெம்பர் 10 ஆம் திகதியன்று வழங்கப்படும் என்று அறிவித்தனர்.

இதேவேளை, தமது மாகாண அமைச்சுப் பதவியில் தம்மைத் தொடர்ந்து செயற்பட விடாமையை ஆட்சேபித்து டெனிஸ்வரன் தாக்கல் செய்துள்ள மூலவழக்கின் மீதான விசாரணை பெப்ரவரி 2,11 மற்றும் 15 ஆம் திகதிகளில் நடைபெறும் என்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று தெரிவித்தது.

காலைக்கதிர் Kalaikkathir



# விக்கி, சிவாஜிலிங்கம் மீது நடவடிக்கை இல்லை ஏன்?

## சிங்கள ராவய அமைப்புக் கேள்வி

கொழும்பு, ஒக். 17

நாட்டில் மீண்டும் அமைதியின்மையை ஏற்படுத்த முயற்சிக்கும் சி.வீ.விக்னேஸ்வரன், சிவாஜிலிங்கம் போன்றோருக்கு எதிராக அரசு ஏன் இதுவரை சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை எனச் சிங்கள இராவய அமைப்பின் ஒருங்கிணைப்பாளரான வண.மாகல்கந்த சுதத்த தேரர் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோதே இவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவாகச் செயற்பட்டுவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தொடர்பில் எமக்குப் பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளன.

அதாவது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரான சுமந்திரன், தமக்கு வழங்கிய வாக்குறுதிகளை அரசு நிறைவேற்றாவிட்டால், வரவு – செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களிப்போம் என்று கூறியுள்ளார்.

எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அரசு எதனை நிறைவேற்றுவதாக வாக்குறுதி அளித்துள்ளது என்பதைப் பகிரங்கமாகத் தெரிவிக்கவேண்டும்.

அத்தோடு, அரசியல் கைதிகள் என்ற பெயரில் சிறையில் இருக்கும் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களை விடுவிக்கவேண்டும் என்றும், இவர்களால் வலியுறுத்தப்படுகிறது. இந்தக் கைதிகளை விடுவிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதையும் கூறவேண்டும்.

இது சாதாரண ஒரு விடயமல்ல. ஏனெனில், வடக்கு – கிழக்கில் ஆயுதக் குழுக்களின் நடமாட்டங்கள் அதிகரித்துள்ளன எனத் தற்போது தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன.

இவ்வாறான நிலையில், இதிலிருந்து பாதுகாத்துக்கொள்ள அரசு எடுத்துள்ள நடவடிக்கைதான் என்ன? இவ்வாறான பல்வேறு கேள்விகள் எமக்கு உள்ளன.

எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அரசு வழங்கியுள்ள வாக்குறுதிகள் என்ன என்பதை நாட்டுக்கு பகிரங்கமாகத் தெரிவிக்க வேண்டும்.

வடக்கின் முதல்வர் தனி ஈழத்தைக் கோரி வருகிறார். மறுபுறத்தில் பிரபாகரனின் உறவினரான சிவாஜிலிங்கம், கரும்புலித் தினத்தை அனுஷ்டித்து வருகிறார்.

இவ்வாறான நிலைமையில்தான் நாம் இந்தக் கேள்விகளை அரசிடம் முன்வைக்கிறோம். நாட்டின் மீது அக்கறை கொண்ட அனைவரும் இது தொடர்பில் சிந்திக்கவேண்டும்.

ஒற்றையாட்சிக்கு எதிராகச் செயற்படும் இவர்களுக்கு எதிராக இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதில் பாராபட்சம் பார்க்கப்படுகிறது என்பதே இந்த விடயத்திலிருந்து வெளிக்காட்டப்படுகின்றது.

நாட்டில் பயங்கரவாதம் மற்றும் சமஷ்டியைக் கொண்டுவர முயற்சிக்கும், சிவாஜிலிங்கம், விக்னேஸ்வரன், ஸ்ரீதரன் போன்றோருக்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை?

அத்தோடு, மீண்டும் புலிகளைக் கொண்டுவரவேண்டும் எனக் கருத்துக்கூறிய விஜேயகலா மகேஸ்வரனும் கைதாகி இரண்டே மணி நேரத்தில் பிணையில் விடுதலை செய்யப்படுகிறார்.

இதனை நாம் சுட்டிக்காட்டினால் எம்மை இனவாதிகளாக சித்திரிக்கிறார்கள். இவ்வாறான ஒரு நாட்டில்தான் நாம் இன்று வாழ்ந்துகொண்டிருக்கிறோம். – என்றார்.

(ஐ)

# 100 மாணவர்களுக்கு சைக்கிள்கள்





முல்லைத்தீவு, ஒக். 17

முல்லைத்தீவு மாவட்டத்தில் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட 100 மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கும் நிகழ்வு நேற்று துணுக்காய் வலயக்கல்வி அலுவலகத்தில் வலயக்கல்வி பணிப்பாளர் தலைமையில் நடைபெற்றது.

வடக்கு மாகாண சபை பிரதி அவைத் தலைவர் வ.கமலேஸ்வரனின் 2018 ஆம் ஆண்டு குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட 100 சைக்கிள்களே இவ்வாறு வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிவமோகன், வடமாகாண சபை பிரதி அவைத் தலைவர் வ.கமலேஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன், புதுக்குடியிருப்பு பிரதேச சபைத் தவிசாளர், உறுப்பினர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

# கல்வி அமைச்சில் நவராத்திரி விழா



கொழும்பு, ஒக். 17

கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் நவராத்திரி விழா நேற்று மாலை கல்வி அமைச்சின் வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம்,கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அவர்களுடன் இராஜாங்க அமைச்சின் செயலாளர் திஸ்ஸ ஹேவாவிதான உட்பட கல்வி அமைச்சின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# மரக்கறிகள் விலை உயர்வு



கொழும்பு, ஒக். 17

மரக்கறிகளின் விலைகள் மீண்டும் அதிகரித்துள்ளன.

நாட்டில் நிலவிய மழையுடனான சீரற்ற காலநிலையால், மரக்கறிகளின் அறுவடை வீழ்ச்சியடைந்துள்ளது எனத் தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், சுமார் 60 வீதமான மரக்கறிகள் மழையினால் அழிவடைந்துள்ளன எனவும் அது தெரிவித்துள்ளது.

எதிர்வரும் வாரத்தில் மரக்கறிகளின் விலைகள் மேலும் அதிகரிக்கக்கூடும் எனவும் தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையம் மேலும் கூறியுள்ளது.

தக்காளி, கறிமிளகாய், லீக்ஸ் உள்ளிட்ட சில மரக்கறிகளின் விலைகள் அதிகரித்துள்ளன எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

# நல்லாட்சி அரசைக் காப்பதில் உறுதியாக உள்ள கூட்டமைப்பு

## சாடுகிறார் சுரேஷ் பிறேமச்சந்திரன்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 17

தமிழ் மக்களுக்கு எந்தவிதமான நன்மைகளையும் செய்யாத புதிய அரசை அதன் இறுதிக் கட்டத்திலும் காப்பாற்றுவதையே முதன்மையாகக் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படுகிறது.

– இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவருமான சுரேஷ் பிறேமச்சந்திரன்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் மக்களது இரு பிரதான பிரச்சினைகளான தேசிய இனப் பிரச்சினையையும் , யுத்தத்திற்கு பின்னரான பிரச்சினையையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒன்றோடு ஒன்று கலந்து நியாயம் கற்பிப்பது சரியான செயற்பாடு அல்ல.

புதிய அரசியல் சாசனம் உருவாகவேண்டுமானால் இந்த அரசுக்குத் தொடர்ச்சியாக ஆதரவு கொடுக்க வேண்டும் எனக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் யாழிலும், தலைவர் சம்பந்தன் மட்டகளப்பிலும் தெரிவித்துள்ளனர். .

நாம் ஒரு விடயத்தை தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். தமிழ் மக்களது பிரச்சினைகளில் தேசிய இனப் பிரச்சினை என்றும், யுத்தத்திற்கு பின்னரான பிரச்சினை என்றும் இரண்டு உள்ளன. இதில் காணாமற் போனோர் பிரச்சினை, நில விடுவிப்பு, அரசியல் கைதிகளின் பிரச்சினை ஆகியன யுத்தத்திற்குப் பின்னரான பிரச்சினைகளாகும். ஆனால் கூட்டமைப்பு தற்போது இவை இரண்டையும் ஒன்றோடு ஒன்று கலந்து பேசுவது சரியான உத்தியல்ல.

புதிய அரசுடன் இணங்கிச் செயற்பட்டமையால் இவர்கள் தமிழ் மக்களுக்குப் பெற்றுக்கொடுத்தவை என்ன?

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் பிரயோசனமான தீர்வு காணப்பட்டதா? புதிய அரசால் எங்கு, எத்தனை ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டது ? வடக்கில் 60 ஆயிரம் ஏக்கர் கையகப்படுத்தப்பட்ட காணிகளில் எத்தனை ஏக்கர்கள் விடுவிக்கப்பட்டன ?

இந்நிலையில் இந்த அரசின் இறுதிக் கால கட்டத்திலும் காப்பாற்றவே கூட்டமைப்பு முயல்கின்றது – என்றார்.(ஐ–07)

# அரசை அச்சுறுத்துகிறது தமிழ்க் கூட்டமைப்பு

## ஜி.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 17

சிறைகளிலுள்ள விடுதலைப் புலிகளை விடுதலை செய்ய வேண்டுமென, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசை அச்சுறுத்தி வருகிறது என்று பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் குற்றம்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தவறான காரணங்களுக்காவும் சர்வதேசம் மற்றும் புலம்பெயர்த் தமிழ் அமைப்புகளுக்கு வழங்கிய வாக்குறுதிகளுக்காகவும், புதிய அரசமைப்பை அரசு கொண்டு வருவதற்கு எத்தனிக்கிறது.

புதிய அரசமைப்பை நாட்டு மக்கள் கேட்கவில்லை. தங்களது பொருளாதாரச் சுமை குறைக்கப்படவேண்டும் என்றே கேட்கிறார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தற்போதைய அரசமைப்பு நீடித்தால், நாட்டில் மீண்டும் யுத்தமொன்று ஏற்படுமென்றுக் கூறியுள்ளார். இப்படி சம்பந்தனின் அச்சுறுத்தலுக்குப் பயந்து புதிய அரசமைப்பு கொண்டுவரப்படுமானால், அது மக்களுக்கு இழைக்கும் துரோகம்.

சுயாதீனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவுக்குத் தேவையான அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்ற போதிலும், அவர் அதனைப் பயன்படுத்துவதில்லை. தேர்தலை எந்த முறைமையில் நடத்தினாலும் அரசை வீழ்த்துவதற்கு, ஒன்றிணைந்த எதிரணி தயார் – என்றார். (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.10.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.